# அக்கினிக்குஞ்சு

புலம்பெயர்ந்த ஈழத் தமிழரின் சர்வதேச கலாசார - இலக்கிய மாசிகை




ஆசிரியர் : யாழ். எஸ். பாஸ்கர்

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்திடல் வேண்டும்"

## THE TAMIL CULTURAL PROGRAMMES ORGANISED BY US.,

1987 - Dr SEERKAZHI S. GOVINDARAJAN TROUPE - LONDON,
NOV. PARIS, SWITZERLAND.

1988 - Dr. K.J. YESUDAS - P. SUSHEELA TROUPE - EUROPE.
OCT.

1988 - AMBI SARALA TROUPE - EUROPE.
OCT.

1988 - Dr T.M. SOUNDERARAJAN TROUPE - LONDON, PARIS, GERMANY,
NOV SWITZERLAND.

1989 - AMBI SARASA TROUPE - SRI LANKA, MALAYSIA, SINGAPORE,
NOV. BANGKOK, HONGKONG, AUSTRALIA,

1989 - Dr, T M. SOUNDARARAJAN, P. SUSHEELA, JOSHVA RAJAN TROUPE -
APRIL USA, CANADA, LONDON, PARIS, SWITZERLAND, GERMANY.

1989 - BHARATHIRAJAA, MALAYSIA VASUDEVAN, M.S. RAJESWARI
JUNE TROUPE - EUROPE.

1989 - KUNNAKUDI VAIDYANATHAN TROUPE - EUROPE.
OCT.

1990 - MANORAMA BHOOPATHY T.M S. SELVAKUMAR, T.L THYAGARAJAN
APRIL TROUPE LONDON, PARIS, SWITZERLAND, NORWAY, GERMANY.

1990 - T.M.S SELVAKUMAR TROUPE-SRILANKA
MAY

1990 - OMAKUTCHI NARASINHAN. I.S.R. TROUPE - SRILANKA
JUNE

1990 - MAJOR SUNDARARAJAN TROUPE-EUROPE
JULY

1990 - DHEEPAN CHAKRAVARTHY TROUPE - SRILANKA
SEP.

1990 - T.K RAMAMOORTHY, T.K.KALA, T.L. MAHARAJAN, S.S.CHANDRAN.
OCT. CHANDRASEKHAR, THYAGU, KOVAI SARALA TROUPE - EUROPE

## 1991

"கிராமிய இசைத் தென்றல்"

டாக்டர் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, லண்டன், பாரீஸ்,
சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, நார்வே, டென்மார்க், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்,
தாய்லாந்து, ஹாங்காங், மற்றும் பல நாடுகளில் பெருமையுடன் வழங்கவிருக்கும்

"தமிழோசை"

பாரம்பரிய கிராமிய தமிழிசை நிகழ்ச்சி,

## madura

travel service

No. 11-3, GANDHI IRWIN ROAD, IMPALA COMPLEX
OPP : EGMORE RAILWAY STATION, EGMORE,
MADRAS-600 008, TAMIL NADU, INDIA.
PHONE: 8252002, 8252970, 8253858
TELEX: 41-6937 PCO IN ATTN: TDS 018
FAX: 91-44-473084 GRAM: "MADUTRAV"

Mr. M. Nagulendram,
7, Hatherley Road,
Walthamstow,
London E17 6SE

# அக்கினிக் குஞ்சு

புலம் பெயர்ந்த ஈழத் தமிழரின்
சர்வதேச கலாசார இலக்கிய மாசிகை


பிரதம இலக்கிய ஆலோசகர் :
எஸ்.பொ
ஆசிரியர்:
யாழ். எஸ்.பாஸ்கர்
துணை ஆசிரியர்கள்:
ரி.தர்மகுலசிங்கம்
இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்
அவுஸ்ரேலியா
பிரியா பப்ளிகேஷன்ஸ்ஸுக்காக
ஏ ஆர் பிரிண்ட்ஸ் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
எம்.ஏ. ரஹ்மான்


கதைகளிலேவரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே; கட்டுரையாசிரியரின் கருத்துக்கள், 'அக்கினிக்குஞ்சு'வின் கொள்கையை பிரதிபலிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.


INTERNATIONAL CULTURAL AND LITERARY MONTHLY OF DISPLACED EELAM THAMILS
Chief Literary Advisor : Espo
Editor : Yal S.BASKAR
Australia
(03) 555 - 3230
Deputy Editors:
T. Tharmakulasingam
DENMARK
(75) 588- 512
Ilampirai M.A.Rahman
MADRAS- INDIA
P.P. 420011.
Correspondence contribution & subscription address
PRIYA PUBLICATIONS ☐ P.O.BOX 470
☐ MOORABBIN ☐ VIC -3189 ☐ AUSTRALIA


நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்


அக்கினி–1
குஞ்சு–1
பிப்ரவரி–1991


உள்ளே


மனம் விட்டுப் பேசுவோம்
ஆசிரியர்...4

அக்கினி போற்றுதும்
ராஜ மித்ரா...6

பாரதியார்...7
நான் உன்னைத் தேடுகிறேன்...9

அனலும் மலரும்
கொண்டோடி சுப்பர்...10

தமிழச்சி தரிசனம்
க. கலாமோகன்...13

நேசம் நாடும் நெஞ்சங்கள்
லெ. முருக பூபதி...15

தோணி சிறுகதை
வ. அ. இராசரத்தினம்...16

இரு உலகம் கவிதை
கவிஞர் அம்பி...22

ஈழத் தமிழர் அரசியல் : ஒரு சாட்சியம்
அபிமன்யு...24

தலையங்கம்...28

உல்லாச வேளை
யாழ். சுதாகர்...29

# மனம்விட்டு பேசுவோம்

இனிய தமிழ் அன்ப,

புலம் பெயர்ந்து, உலகின் பல நாடுகளிலும் பரந்து, வாழும் தமிழர் மத்தியிலே, இன்று கலை-இலக்கிய இதழ்கள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றிலே பல ஃபோட்டோ காப்பி எந்திரத்தின் உதவியுடன் வெளிவருகின்றன. அவை அனைத்தும் வட்டார நோக்குகளை-இலக்குகளையுந் தாங்கி வெளிவருகின்றன. இருப்பினும், அவை அனைத்துமே தமிழ் நேசிப்பின் வெளிப்பாடு. எனவே, உவகைக்கு உரியன.

பத்தோடு பதினொன்றாக 'அக்கினி குஞ்சு'வை நாம் வெளியிடவில்லை என்பதை நமது முதலாவது இதழே இனங்காட்டும் என்று நம்புகிறோம். வட்டார நலன்களை விட்டு, புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலே உலகார்ந்த தமிழ் கலை-இலக்கியச் சஞ்சிகை ஒன்று வெளிவருதல் வேண்டும் என்கிற ஆசை தமிழ் நேசிப்புச் சுரக்கும் நெஞ்சங்கள் பலவற்றிலே நீண்ட நாள்களாக கனன்றது. இந்த அத்தியந்த ஆசையைப் பூர்த்தி செய்யும் பூபாளமாக 'அக்கினி குஞ்சு'வை வெளியிடுவதில் உண்மையிலேயே பூரிப்பு அடைகின்றோம்.

ஒரு சினிமாப் படம் பற்றியே நாலு மாறுபட்ட அபிப்பிராயம் நிலவுவதைப் பார்க்கின்றோம். அரசியல் என்று வந்துவிட்டால் எத்தனை எத்தனை வர்ணங்கள்? உரிமைப் போர் என்று சொல்லிக்கொண்டே எத்தனை மாறுபட்ட இயக்கங்கள்? சிங்கள வெறிபிடித்த இராணுவத்தின் மோப்ப நாய்களாக இனங்காட்டிக் கொள்ளக்கூடியவர்கள் கூட 'ஓகோ யாவாரம்' நடத்தக்கூடியதாகவும் இருக்கின்றது. படைப்பிலக்கியத் துறையிலும் கோஷங்களுக்குக் குறைவில்லை. 'முற்போக்கு', 'பிற்போக்கு', 'நற்போக்கு', 'சோற்றுப்போக்கு' என்று பல போக்குகள். 'சித்தம்போக்கு, சிவம் போக்கு' என்ற போக்கிலே, கருத்துக்களின் எல்லாச் சுருதிகளையும் நம்மால் இனங்காணவும், ஜீரணிக்கவும் முடிகின்றது. ஒரு கருத்தினை ஏற்றுக்கொள்ளுதல் என்பது வேறு; கௌரவித்தல் என்பது வேறு. கருத்து வேறுபாடுகளைக் கௌரவிக்கும் தாராளம் 'அக்கினிக் குஞ்சு'வுக்கு உண்டு. நமக்கு என்று தனித்த கொள்கைகளும் இலக்குகளும் உண்டு என்பதைப் பகிரங்கப்படுத்தும் அதே மூச்சிலே, அவற்றை வாசகர்மீது திணிக்கக்கூடாது என்கிற பண்பும் அக்கறையும் 'அக்கினிக் குஞ்சு'வுக்கு உண்டு. இது மேலெழுந்தவாரியாக முரண்பாடாகத் தோன்றிய போதிலும், இந்த முரண்பாடு சத்திய தரிசனத்தின் ஒரு கோலம் என்பதை அறிந்தோர் அறிவர்.

புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுடைய கலாசாரத் தலைமைத்துவத்தை அநுபவிக்கும் 'தத்துவகாரர்' தாமே என்று ஆங்கில மொழியிலே பாண்டித்தியம் பெற்றவர்கள் சிலர் கோலங்காட்டும் அசிங்கம் ஒன்று முகிழ்ந்து வருவதை நாம் இனங்காணுகின்றோம். வட அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா ஆகியநாடுகளிலேஆங்கிலம் அரசோச்சுகின்றது. இந்நாடுகளிலே 1983ஆம் ஆண்டுக்கு முன்பே ஈழத் தமிழர்கள் பலர் குடியேறி வாழத் தலைப்பட்டார்கள். கல்வித்துறையிலே சம்பாதித்துக்கொண்ட பெரிய பட்டங்களை 'அந்நிய செலாவணி'யாக மாற்றியெடுக்க, 'காசேதான் கடவுளடா' என்ற வேதத்துடன் அவர்கள் புலம் பெயர்ந்து சென்றவர்கள். அவர்கள் குடியேறிய நாடுகளிலே, இக்காலத்தில் பொருள் வசதியுடன் வாழ்கிறார்கள். அஃது அவர்களுடைய சுயதேட்டம். அதனைக் கௌரவிக்கிறோம். தங்களை 'மூத்த குடிகள்' என்று சுய உயர்வு செய்து, தங்களுடைய வளத்திற்கு 'ஆங்கில முதன்மே காரணம்' என்று இனிப்புக் காட்டி, பின் வந்தவர்களுடைய தமிழ் நேசிப்பின் தூய்மையை விதையடித்து, ஈழத் தமிழர்களுடைய கலாசாரத் தனித்துவங்களைக் கொச்சைப் படுத்த இவர்களுட் சிலர் முனைகிறார்கள். இந்த அநியாயத்தை நேர்மையான சிந்தனையுள்ள எந்தத் தமிழனாலும் அங்கீகரிக்க முடியாது. இந்தப் பிரச்சினையை நோர்வே, சுவீடன், டென்மார்க், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சிலாந்து போன்ற நாடுகளிலே புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர் எதிர்நோக்கவில்லை. தமது உழைப்பு மொழி வேறு; தமது கலாசார மொழி தமிழே என்கிற யதார்த்தத்திலே அவர்

**-யாழ். எஸ். பாஸ்கர்-**

களுடைய பிரக்ஞை உருவாகியுள்ளது. இந்தப் பிரக்ஞை மிகவும் சௌக்கியமானது.

சர்வதேசமாகப் புலம் பெயர்ந்த ஈழத் தமிழருடைய கலாசார-இலக்கியப் பிரச்சினைகளும் தாகங்களும் தனித்துவமானவை. ஈழத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளினால் (பெரு முதலாளிகளின் 'தேசிய கோலத்'திற்கு வர்ணந் தீட்டும் மூன்று தமிழ்த் தினசரிகளின் ஞாயிறு இதழ்களை ஒப்புக்காக சஞ்சிகை என்று அழைப்பதினால்) அவற்றைப் பூரணமாகப் புரிந்து கொள்ள முடியாது' புரிந்து கொண்டாலும், உதவும் மார்க்கமும் சக்தியும் அவற்றிற்கு இல்லை. அவற்றின் இயலாமையை நம்மாற் புரிந்துகொள்ளவும் முடிகின்றது. அவற்றிலே பணிபுரியும் சிலரேனும் புலம் பெயர்ந்த தமிழர்களுடைய கலாசார எழுச்சிகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுத்தல் வேண்டும் என்று காட்டுகின்ற அக்கறை நம்மைச் சிலிர்க்க வைக்கின்றது. ஆனால், சில விளம்பரங்களை (அந்நிய செலாவணியில் கிடைக்கும் விளம்பரங்கள் கசக்குமா?) போட்டு, சில தகவல்களை வெளியிட்டு புலம் பெயர்ந்த தமிழர்களுடைய ஏக்கங்களைப் பிரீதி செய்துவிடலாம் என்று நடித்தல் மிகவும் பாமரத்தனமானது.

இந்த அவலங்களையும், அதே சமயம் நேர்ந்த தேவைகளையும் நாம் நீண்ட காலமாக யோசித்து வந்திருக்கிறோம். புலம் பெயர்ந்த ஈழத் தமிழரின் சர்வதேச - கலாசார - இலக்கிய மாசிகை ஒன்றினை வெளியிடுதல் ஆக்கபூர்வமான முயற்சி மட்டுமல்ல, அத்தியாவசிய தேவையுங்கூட என்பதைப் பல அன்பர்களும், பல சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தினார்கள். எல்லோருக்கும் 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்கிற தயக்கம். இத்தகைய ஒரு சூழ்நிலையிலேதான், நாம் ஓர் அக்கினிப் பிரவேசத்தினை மேற்கொண்டு 'அக்கினிக் குஞ்சு'வை வெளியிடத் துணிந்தோம். நமது துணிவுக்கு உங்களுடைய உதவும் கரங்கள் உறுதுணையாய் அமையும் என்ற நம்பிக்கை மூலக்கல்லாய் அமைகின்றது என்பதைப் பிரசித்தப்படுத்துவதற்கு நாம் கூச்சப்படவில்லை.

இது உங்களுடைய சங்கப் பலகை, இந்த சங்கப் பலகை, புலம் பெயர்ந்த ஈழத் தமிழரின் சகல ஆக்கங்களுக்கும் இடமளிக்கும் வகையில் விரிந்து கொடுக்கும். இஃது உங்களுடைய சஞ்சிகை என்கிற பந்தபாச உணர்வு 'அக்கினிக் குஞ்சு'வின்மீது உங்களுக்கு ஏற்படுதல் வேண்டும் என்பதை நாம் யாசிக்கின்றோம். இதன் வளர்ச்சிக்கு உங்களுடைய சகலவிதமான ஆதரவுகளையும் ஆசிகளையும் எதிர்பார்க்கின்றோம். பல்வகைத்தான ஆலோசனைகளையும் வரவேற்கின்றோம்.

கட்டுரை, கதை, கருத்து, துணுக்கு, கடிதம் என்கிற எந்த வடிவத்திலும் உங்களுடைய விஷயதானங்கள் வரவேற்கப்படுகின்றன. எந்தக் கருத்துகளுக்கும் 'அக்கினிக் குஞ்சு'வில் இடம் உண்டு. கருத்துச் சுதந்திரமும், நாகரிகமான ஜனநாயகப் பண்புகளும் பேணப்படுதல் ஆரோக்கியமானது. அதனைப் பேணுவோம். 'அக்கினி குஞ்சு'வின் வளர்ச்சியிலே உங்களுடைய உருப்படியான உதவிகளும், உருப்படியான ஆலோசனைகளும் சங்கமித்தல் வேண்டும். இவை அனைத்துக்கும் ஓர் ஆரம்பமாக, உங்கள் 'அக்கினி குஞ்சு'வை விலை கொடுத்து வாங்குங்கள். உங்களுடைய நண்பர்களையும், அன்பர்களையும் அதனை விலை கொடுத்து வாங்கத் தூண்டுங்கள். 'அக்கினிக் குஞ்சு'வுக்கு நீங்கள் எல்லோரும் செலுத்தும் விலை 'அக்கினிக் குஞ்சு'வின் வளர்ச்சிக்காக நீங்கள் பொழியும் ஆகுதி - வளர்ச்சி என்னும் உண்டியலிலே நீங்கள் போடும் நிதி.

இனி, உங்கள் தரிசனம் தொடரட்டும்...

வணக்கம்.

# அக்கினிக் குஞ்சு

**அன்னை பூமிதனை**
**அணையா ஜோதியாக்க**
**அகிலத்தில் ஒன்று - அதுதான்**
**அக்கினிக் குஞ்சு என்றிட**
**வருக வளர்க வாழ்க**
**அக்கினிக் குஞ்சு அதன்**
**செவ்விதழால்**
**அகிலத்தில் செஞ்சுடர்கக்கிடும்**
**அகிலம் அனைத்திலும்**
**அன்னை பூமியிலும்**
**அணையா தீபத்தை ஏற்றிடும்**
**அடிமை விலங்கை**
**உடைக்கவும்**
**அறநெறி படைக்கவும்**
**[illegible]-எல்லோரும்**
**சமமென முரசொலிக்கவும்**
**ஆணவத்தை அழிக்கவும்**
**அறிவொளியைக் கொடுக்கவும்**
**அகிலத்தில் ஒன்று அதுதான்**
**அக்கினிக் குஞ்சு என்றிட**
**வாழ்க வளர்க.**

**T. தர்மகுலசிங்கம்**
(டென்மார்க்)

# அக்கினி போற்றுதும்...

ராஜ். மித்ரா

**ஒளியைக்** கருமேகம் மறைத்து
இருளை விரித்து வைப்பினும்
இருளை வெட்டிப் பிளந்து
ஒளி மின்னல் பிறக்குமாம்!
இது நியதி.

□

எத்தனை எத்தனை தடவைகள்
இனிப்பு வார்த்தைகள்
நம்பினோம்?
எத்தனை கேலிகள்-
அணாப்புகள்-
அலைக்கழிவுகள்-
தலைக்குனிவுகள்!
எத்தனை வீடுகள்-சாலைகள்-
ஆதனம் சாம்பராய் மாறின;
எத்தனை பெண்களின் கற்புகள்
காமக் கடப்பிலே சாய்ந்தன!
எத்தனை இனிய உயிர்கள்
காவுப் பலியாக மடிந்தன!
ஏன்!
''நாடு முழுவதும் அல்ல
நம் தமிழ்வாழும் பகுதியில்
தேடுவோம் நமது மானம்
நாய்களல்ல நாம் ஆதலால்!''
சொன்னது குற்றமோ?
தீ... தீ... **தீ...**
திசைகள் எட்டும் தீ!
புகை மூட்டங்கள் மூடின
புலால் வேகும்நாற்றம் மிஞ்கின
எஞ்சின
சாம்பல் மேடுகள்-தீ
அவிந்த சாம்பல் மேடுகள்!
சாம்பல் மேட்டிலே
சுகித்துக் குளிக்க
நாங்கள் நாய்களோ?
பேய்களின் சேய்களோ?
மேடுகள் பலப்பல
அனைத்தும் கிளறிக்கிளறி
தேடிச் சோர்ந்த பொழுது...
...கங்குலில் ஒரு தீப்பொறி
நசிந்து மெலிந்து
நினைவும் இழந்து
சேடம் இழுத்து
உசிருக்குப் போராடிய
உசுக்குட்டித் தீப்பொறி
அதன் அஞ்சலியில்
எங்கள் உயிரையே
உதட்டிலே குவித்து
ஊதி ...ஊதி ...ஊ**தீ...**
சோர்வுகள் தோல்விகள்
சேர்ந்திடல் தவிர்த்து
கோழைகள் சதிகள்
கோணங்கி ஆள்காட்டி
சமர்கள்...ஓ...சங்காரம்!
சாவின் கும்பியில்
அஞ்சாது தாழாது
ஊனையும் உயிரையும்
மூச்சாக மாற்றியே
**ஊதி** .. ஊதி... ஊஊ...
ஒரு சின்னஞ் சிறு
குஞ்சினும் குஞ்சான
குருத்தினும் குருத்தான
**'அக்கினிக் குஞ்சு'**
ஒன்றினை இணக்கினோம்.
இந்த-
அக்கினிக் குஞ்சு
அழிவுகளின் சாட்சியம்
ஈழத் தமிழர்தம்
ஓர்மையின் சத்தியம்
ஆதர்ச வேதம்
ஆக்கத்தின் விடியல்
ஆத்மாவின் ஓங்காரம்
அறத்தின் சங்கநாதம்!
எனவே-
அக்கினிக் குஞ்சே!
கனத்த வஞ்சனையால்
கனன்ற ஈழத்துத்
தமிழ் நெஞ்சங்களை
வேள்விக் குண்டமாக்கி
விருப்புடன் வைக்கின்றோம்!

□

வாழ்க அக்கினி
வளர்க அக்கினி
சூழ்ந்து எழுந்தே
கொழுந்து விட்டெரிந்திடு!
ஆகுதி வார்த்தே
ஆயிரம் மந்திரங்கள்
ஓதுவோம். எழுந்தே
கொழுந்து விட்டெரிந்திடு!
அக்கினிநீ ஆதிசக்தி
அனைத்துச் சடத்தையும்
அறுத்து
அசுத்தம் நீக்கிச் சுடராகி
அதிசக்தியாய் மூசி எரிந்திடு!
இருளைப் போக்கவும் அக்கினி
மருளைத் தீர்க்கவும் அக்கினி
தெருளைத் தரவும் அக்கினி
அருளைச் சுரக்கவும் அக்கினி
மனிதர் உணவை
மனிதர் பறிக்கும்
சுரண்டல் வேதனை
பொசுக்கு!
மாப்பிள்ளை ஏலத்தில்
மனிதர் விலைபோகும்
சீதன ஈனத்தைப்
பொசுக்கு!
நிறத்தாலும பிறப்பாலும்
நீசர் வகுத்துள்ள
சாதிப் பேதங்கள்
பொசுக்கு!
புன்மை அகற்றவும் அக்கினி
புதுமை புனையவும் அக்கினி
மேன்மை ஊட்டி வெற்றி
வாகை சூட்டவும் அக்கினி!

---

அக்கினியே நீ நெருப்பில் பிறந்தாய்
வளர்ந்தாய் கனன்றாய் வெம்மையுற்றாய்
வெம்மை முற்றி ஒளியுமானாய்
ஒளியே, வெம்மையே, நீயே
கோலங்கள் பலவிலும் நீயே
ஈழத்தமிழர்தம் வீரத்தெய்வமே,
அக்கினியே எரிக!
உன்னிடத்தே நெய் பொழிகிறோம்
அக்கினியே எரிக!
உன்னிடத்தே நம்ஊனும் நீசர்தசையும்
அக்கினியே எரிக!
பொழிகிறோம்
உன்னிடத்தே ஒரு தலைமுறையின்
உயிரும் செந்நீரும் பொழிகிறோம்
அக்கினியே எரிக!
உன்னையே மேலான ஈசனாய் வரித்து
உன்னார்ப்பணமாய் நம்மையே பொழிகிறோம்
அக்கினியே எரிக!
அக்கினியே கொழுந்து விட்டெரிக!
அனைத்தையும் அளைந்து அணைத்து
அனைத்தும் நீயாக ஒளியாக எரிக!

□

அக்கினி போற்றும் பாரதி கூறினான்:
''அமிழ்தம் அமிழ்தம் எனக் கூறுவோம்-நித்தம்
அனலைப் பணிந்துமலர் தூவுவோம்
தமிழிற் பழமறையைப் பாடுவோம்-என்றும்
தலைமை பெருமைபுகழ் கூடுவோம் □

# போர் முரசு கொட்டிய கவி முரசு

-வ. இராச மனோகரன்



தமிழிசையால் பக்திநெறி பரப்பிய நாயன்மார்கள், ஆழ்வார்கள் வழியில், தமிழிசையைக் கருவியாகக் கொண்டு, தேசிய உணர்வு ஊட்டும் பாடல்களைப் பாடி, மக்களிடையே விழிப்புணர்ச்சி ஊட்டிய சீரிய சிந்தனையாளர் மகாகவி பாரதி.

கர்ணனுடன் கொடை போயிற்று, உயர் கம்பனுடன் கவிதை போயிற்று என்று தமிழ் மக்கள் ஏங்கியிருந்த காலத்தில், ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர், வாராது போல் வந்த மாமணியாய் தமிழ்நாட்டில், எட்டயபுரத்தில் தோன்றி, தாய்மொழிக்கும், தாய்த் திருநாட்டிற்கும் அளப்பரிய தொண்டாற்றி, உலகளாவிய புகழ் எய்திய உலக மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

இவர் தம் ஏழாவது வயதிலேயே அருமையான தமிழ்க் கவிதைகளை விளையாட்டாக விரைந்து இயற்றும் ஆற்றலைப் பெற்றிருந்தார். குழந்தைப் பருவத்திலேயே பெரிய கிழவர்களுடன் அமர்ந்து, உயர்ந்த வேதாந்தத் தத்துவங்களை ஆராயத் தொடங்கினார். இவரது பதினோராவதுவயதில் இவரது கவி புனையும் ஆற்றலைக் கண்ட புலவர் கொடுத்த 'பாரதி' எனும் பட்டமே இவர் பெயருக்கு மகுடமாக இன்றும் நின்று நிலவுகிறது.

பாரதியார் இளம்பருவத்திலேயே கம்பரையும், வள்ளுவரையும், இளங்கோவடிகளையும், தாயுமானவரையும், இராமலிங்க வள்ளலாரையும் அறிந்து, கவிதை ஆற்றலையும், சிந்தனை ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார். இந்நாளில் இவர் பாடிய காவடிச்சிந்து புலவர்களின் பாராட்டைப் பெற்றது.

பிற்காலத்தில் பாரதியார் ஆங்கிலம், தமிழ் மட்டுமல்லாமல், பிரெஞ்சு, சமஸ்கிருதம், இந்தி, உருது, வங்காளி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளையும் அறிந்துகொண்டார், ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ், பைரன், விக்டர் யூகோ முதலிய உலகப் பெருங்கவிஞர்களின் கவிதைகளைப் படித்து அறிவை விரிவாக்கிக் கொண்டார்.

சங்க இலக்கியங்கள், வேதங்கள், உபநிடதங்கள், கீதை முதலிய நூல்களில் பயிற்சியும், சங்கரர், இராமாநுசர், புத்தர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலானோர் பக்தி நெறிகளில் ஆர்வமும், பைபிள், குர் ஆன் போன்ற சமய நூல்களில் ஈடுபாடும் சகோதரி நிவேதிதா தேவி, அரவிந்தர், குள்ளச்சாமி, கோவிந்தசாமி, கோவிந்தஞானி, யாழ்ப்பாணத்து அடிகள் போன்றோர் தொடர்பும், பாரதியாரின் விரிந்த மனத்திற்கு வேதாந்த அறிவுக்குப் பெரிதும் உதவின.

வேத ரிஷிகளின் கவிதைகள் என்ற தலைப்பில் சில உபநிடதங்கள், பதஞ்சலியோக சூத்திரம், பகவத் கீதை ஆகியனவற்றுக்குப் பாரதியார் செய்த மொழிபெயர்ப்பும், முன்னுரையும் தத்துவ அறிஞர்களின் பாராட்டைப் பெற்றன.

'எழுதுகோல் தெய்வமிந்த எழுத்துந் தெய்வம்' என்று எழுத்துப் பணியைப் புனிதப் பணியாகக் கருதிய பாரதியார், 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல்' என்ற கொள்கை உறுதியோடு பதினேழு ஆண்டுக்காலம் சுதேச மித்திரன், இந்தியா, சக்கரவர்த்தினி, பால பாரதா போன்ற பல பத்திரிகைகள் மூலம் நெருப்பு மழை பொழியும் கட்டுரைகளையும், கனல் தெறிக்கும் கவிதைகளையும் எழுதி, மக்கள் மத்தியில் தேசபக்தியை வளர்த்தார்.

வாழ்க்கையில் இன்பத்தையும் வசதியையும் பெறுவதற்காக, சுதந்திர வாழ்வைஇழந்து, அடிமை மோகம் கொண்டிருந்த மக்களைப் பார்த்து,

'' மண்ணிலின் பங்களை
விரும்பிச்சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம்
வாங்கினாற்
கைகொட்டிச்சிரியாரோ''

-என்று எள்ளி நகையாடினார்.

தாய்த் திருநாடு விடுதலை பெறவேண்டும் என்பதற்காக 1905 ஆம் ஆண்டிலிருந்தே காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டார். திலகரின் புதிய கட்சியான தீவிரவாதக் கட்சியின் பிரச்சாரகராக இருந்து, ஆவேசச் சொற்பொழிவுகள் செய்தார். சுயராஜயம் நமது பிறப்புரிமை என்று முழங்கினார். வங்க மாநிலத்தைத் துண்டாட ஆங்கில வைசிராய் கர்சன் பிரபு முடிவு செய்ததை எதிர்த்து நாடு முழுவதிலும் வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்த போது, 'வங்கமே நீ வாழிய' என்ற எழுச்சிமிகு பாடலை பாரதியார் பாடி, வீர முரசு கொட்டினார.

-நன்றி **தமிழரசு**

# KENYONS

## Resolving your Legal Problems

**KENYONS** BARRISTERS AND SOLICITORS

157 HIGH STREET, PRESTON, MELBOURNE, VIC-3072
and
211 LOGAN ROAD, BURANDA, BRISBANE, QLD-4001

Tel : (03) 480-5999
(07) 891-666

Fax : (03) 484 1092
(07) 891-6667

**YOU ARE INVITED TO RING FOR A COMPLETELY NO OBLIGATION FREE CONSULTATION**

We undertake all Legal Work but specialise in :

- ☐ WORK CARE
- ☐ MOTOR ACCIDENT
- ☐ CRIMINAL & POLICE OFFENCES
- ☐ PROFESSIONAL NEGLIGENCE
- ☐ CONVEYANCING (BUYING & SELLING)
- ☐ COMPANY MATTERS
- ☐ ACCIDENT COMPENSATION
- ☐ IMMIGRATION & BUSINESS MIGRATION
- ☐ MATRIMONIAL
- ☐ COMMON LAW
- ☐ WILLS & PROBATE
- ☐ TAXATION
- ☐ MORTGAGES
- ☐ COURT APPEARANCES

## All other Legal Services

Contact :

MR. GARY ALLWOOD or MR. WIMALESWARAN (WIMAL)

**வாசகர்களே !**

பலவித காரணங்களாலே நாம் இன்று புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களாய் வாழ்கின்றோம். தாய் நாட்டினை விட்டுப் புறப்பட்டபொழுது, சேர்நாட்டின் திசைகூடத் தெரியாமல் அவதிப்பட்டிருக்கிறோம். இந்தப் புலம்பெயர்ந்த பயணங்களின்போது இனிய நண்பர்கள்-உறவினர்கள் சென்ற தடங்களைத் தவறவிட்டு, அவர்களுடன் தொடர்பு கொள்ள வகை அறியாது பலர் தவித்துக் கொண்டிருக்கின்றோம். கவலையை விடுங்கள். புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் இடங்களெல்லாம் 'அக்கினிக் குஞ்'சின் பறப்பு நிகழும். 'நான் உன்னைத் தேடுகிறேன்' என்ற இந்தக் களத்தினைப் பயன்படுத்தி, அவர்களுடன் தொடர்பு கொள்ள முயலுங்கள். தொடர்புகொள்ளும் வரை தமது முகவரிகளைப் பிரசித்தப்படுத்தத் தயங்குபவர்கள், நமது முகவரியை மேற்பார்வை முகவரியாகத் தாராளமாகப் பயன்படுத்தலாம். நம் உதவி என்றும் உண்டு. உங்கள் மகிழ்ச்சிப் பெருக்கும் எங்கள் இலட்சியம்.

-ஆசிரியர்

**அன்பு நண்பா சதீஸ்,**

**1**

நீ இப்பொழுது எங்கே இருக்கிறாய் ?

எண்பதில் நோர்வேக்குப் படிக்கப் போனேன். அன்றிலிருந்து உன்னைத் தேடுகிறேனடா. இடையில் பத்து ஆண்டுகள் மறைந்துவிட்டனவா? ஆனாலும், என் மனதில் உன் நினைவுகள் இன்னமும் பசுமையாக, வண்ணங்கள் கெடாமல், இருக்கின்றன.

எத்தனை கடிதங்களை உன் வீட்டு விலாசத்துக்கு அனுப்பியிருக்கிறேன்...பதிலில்லை. சிந்தித்தபோது, நீ மட்டுமல்ல, உன் குடும்பத்தினரே பழைய முகவரியில் இல்லை என்ற முடிவுக்கு வந்தேன். நம் நாட்டுப் பிரச்சினைகள் உங்களை எங்கு திசை மாறிப் பறக்க வைத்ததோ?

அண்மையில் நான் இந்தியா சென்றிருந்தேன். அப்பொழுது, நம் இருவருக்குமே பழக்கமான நண்பன் ஒருவனைத் தற்செயலாகச் சந்தித்தேன். உன்னைப்பற்றி ஆர்வமுடன் விசாரித்தேன். நீ வெளிநாடு ஒன்றுக்குப் போய்விட்டதாகச் சொன்னான். எந்த நாடு என்பதை அவனும் அறியானாம். இருப்பினும், நிம்மதி. நீ உயிருடன் உலகத்தின் எங்கேயோ ஒரு மூலையில் வாழ்கின்றாய் என்பது என் மனதுக்கு எத்தனை சந்தோஷத்தை அளிக்கிறது, தெரியுமா?

இந்த 'அக்கினிக் குஞ்சு' நீ இருக்கும் இடத்திற்குப் பறந்து வந்தால், நீ இருக்கும் இடத்தை அறியத்தாடா. இடையில் நின்றுபோன நமது நட்புப் பயணம், ஆனந்தமாகத் தொடர வழி செய்... ஒட்டுமடத்தைச் சேர்ந்த எஸ். சதீஸ்வரனை அறிந்தவர்களாவது அவனுடைய தற்போதைய முகவரியை அறியத்தந்து உதவுவார்களா?

C/o. AKKINI KUNJU, P.O. Box 470
MOORABBIN, VIC-3189
AUSTRALIA

அன்புடன்,
அரியாலையைச் சேர்ந்த **என். சிறீ**

**என் இனிய வசந்தகுமார்,**

**2**

நீ அச்சுவேலியிலே பிறந்தாய். நான் அளவெட்டியிலே பிறந்தேன். விதி வசத்தினால் இருவரும் வசாவிளான் மத்திய கல்லூரி மாணவர்களானோம். அந்த மாணவப் பருவத்து, கள்ளமற்ற இனிய நட்பு இன்றும் என் நெஞ்சிலே பசுமையாக இருக்கின்றது. பத்து வருடங்களுக்கு முன்னர் பிரிந்தோம். வெவ்வேறு திக்குகளிலே பறக்கும் திசைமாறிய பறவைகளானோம். இடையிலே பத்து வருடங்கள் ஓடி மறைந்துவிட்டனவா என்பது மலைப்பாக இருக்கின்றது.

இன்று நான் அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உன்னுடன் மீண்டும் தொடர்பு கொண்டு, நமது நட்புப் பயணத்தைத் தொடர மிக மிக ஆவலாக இருக்கின்றேன். என் இனியவனே, நீ இருக்கும் இடத்தைத் தேட 'அக்கினிக் குஞ்'சுவின் உதவியை நாடுகின்றேன். அவனுக்கு செய்தி கிடைக்காது போனாலும், அச்சுவேலி எஸ். வசந்தகுமாரை அறிந்தவர்கள் அவனுடைய தற்போதைய விலாசத்தினை எனக்கு அறியத் தந்து உதவுவார்களா?

C/o. AKKINI KUNJU, P.O. Box 470
MOORABBIN, VIC-3189
AUSTRALIA

அன்புடன்,
அளவெட்டியைச் சேர்ந்த **ஆறுமுகம் வித்தியானந்தன்**

...கொண்டோடி சுப்பர் தமிழ் ஈழத்தின் பழம்பெரும் எழுத்தாளர். பலே கில்லாடியும். இதனால் பிரச்சினைக் குரியவர் என்கிற கியாதியும் அவருக்கு உண்டு. அவருடைய எழுத்துக்களிலே அனல் வீசுமோ, அல்லது 'மலர் மணம் வீசுமோ நாம் அறியோம். இந்தப் பகுதியை எழுதுவதற்கு அவருக்குப் பூரண சுதந்திரம் அளித்துள்ளோம். ஆனால், அவரைக் காட்டமாக விமர்சிக்கும் உரிமை வாசகருக்கு உண்டு. அத்தகைய விமர்சனங்களை உவகையுடன் பிரசுரிப்போம்.

- ஆசிரியர்




மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர், அவரது பர்ண சாலையாகப் பயன்படும் மாட்டுத் தொழுவம் கணியமுள்ள தமது கொட்டிலுக்குள் நுழைந்தார். இளங்கன்றுச் சாணகத்தினால் மெழுகப்பட்டிருந்த தரையின் மண்வாசனை அவரை மகிழ்வித்தது. மான்தோலை ஒரு தடவை உதறி, மீண்டும் ஈச்சேரிலே போட்டார். அதில் அமர்ந்தார். சட்டங்களை நீட்டி விட்டு, கால்களைத் தூக்கிப் போட்டு, சரிந்து படுத்தார். திவ்வியமாக இருந்தது. மடிக்குள்ளிருந்த தாவடிப் புகையிலையை எடுத்து ஒரு சுத்தினைச் சுருட்டத் துவங்கினார். காம்புகளை நீக்கிய காப்பிலையால் தாம் இணக்கிய சுருட்டுக்கு ஒரு போர்வை போட்டு, அடிப் பகுதி மட்டமாக இருப்பதற்காக, கொடுப்பிலே வைத்து, இலேசாகக் கடித்துத் துப்பினார்.

'இவரும் கண்டறியாத சிலம்பாய் எடுத்து எழுதுவாராம் ...மண்வாசனை எண்டு சொல்லி உந்த லோக்கல்கள் கதைக்கிறதை முடைஞ்சு எழுதுறதும் ஒரு எழுத்தே ..' என்று பழஞ்சீலை கிழித்தபடி, அவருடைய 'அடிசிற் கினியவ'ளான வக்கணைச் செல்லாச்சி கொட்டில் பக்கம் வந்தாள். சண்டைச் சேவல் சிலிர்த்துக்கொள்ளும் பாவனையில், ஒரு தடவை கூந்தலை அவிழ்த்துச் சரிசெய்து, அள்ளி முடிந்து கொண்டாள்.

இவற்றைக் கவனிக்காத 'பாவ'லாவுடன், 'இஞ்சேர்... ஒரு நெருப்புப் பெட்டி எடுத்தாணை' கெஞ்சுதலும் கொஞ்சுதலும் இழையோடக் கேட்டார்.

'நெருப்புப் பெட்டியோ?... உங்களுக்கு ஊர் உலகம் இருக்கிற நிலவரம் தெரியுமே?...'

'சரி ... ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு வக்கணை வேண்டாம் ...பழக்கம் பெரிசோ, பரவணி பெரிசோ? பொச்சு மட்டையிலை நெருப்பு மூட்டிக் கொண்டுவாவன்...கன நேரம் சுருட்டுப் பிடிக்காமல் வாயும் புளிச்சுப் போச்சு ...மூளையும் ஓடமாட்டன் எண்ணுது.'

'ரெண்டு குச்சிக்கு மேலை பழுதாக்கக் கூடாது ..' என்று ஒரு பெரிய 'கண்டிஷன்' போட்டபடி ஒரு நெருப்புப் பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர் வெகு 'பத்திய'மாகப் புகையிலைச் சுத்தைப் பத்தவைச்சு, ஆரச் சோர, அந்தக் காலத்துக் கரிக்கோச்சி போல, புகை கக்கத் துவங்கினார்.

'நான் ஒரு விசரி கத்துறது உங்கடை காதிலை விழுகுதே?... 'பிதாமகர்', 'பிற்போக்குக் கொடுமுடி', 'எரிசரம்', 'ஆசை அபிலாஷை', 'தசாப்தம்' 'இமாலயப் பணி' இவற்றுக்கெல்லாம் எனக்குத் தமிழ் தெரிஞ்சாக வேணும்' என்று வக்கணைச் செல்லாச்சி மீண்டும் கொழுவல் நியாயங்களை இழுத்துப் பிடித்தாள்.

புகையிலைச் சுத்தின் சுதியிலே அசைந்த சுப்பர், 'நீயும் வலு விண்ணானமாய்த்தான் தமிழ் கேக்கிறாய் ..பாப்பம்... பிதாமகர் என்றால் வந்து ..வந்து ...ஓ, மகாபாரதத்திலே வாற பீஷ்மர் ..பிற்போக்குக் கொடுமுடியென்றால் .. எங்கையெண்ணை உந்தச் சொற்களைக் கண்டு பிடிச்சனி ..' என்று கொ.சு. தடுமாறினார்.

'குஸ்திபோடத் தெரியாதவன் கொடுக்குக் கட்டிக்கொண்டு துடையைத் தட்டித் துள்ளிக் காட்டியது போலைத்தான் நீங்களும் ..' என்று நாக்கு வழிச்ச வ.செ., தினகரன் வார மஞ்

சரியை எடுத்து அவர் மடிமீது வீசினாள். அதிலே, முற்பக்கத்தில் 'அறுபது கண்ட பிரேம்ஜி' என்ற பெட்டிச் செய்தியிலே அந்தச் சொற்கள் கோர்க்கப்பட்டிருந்ததைக் கண்டு பிடிக்க கொ.சு.வுக்குக் கொஞ்ச நேரம் பிடித்தது.

'அக்கோய் ... செல்லாச்சி அக்கோய்...' என்று கிழக்குப் பக்கப் பொட்டடியிலே குரல் கேட்டது.

'இஞ்சை பக்கத்து வீட்டுப் பாக்கியம் கூப்பிடுறாப் போலை கிடக்கு...போய் என்னெண்டு கேளுமப்பா...' வக்கணைச் செல்லாச்சி போனதும், கொண்டோடி சுப்பர் பிரேம்ஜியைப் பற்றிய செய்தியை ஆறுதலாக வாசித்து முடித்தார்.

❋

எந்த மனிதனும் அறுபது ஆண்டுகள் வாழ்வது ஒரு சாதனைதான். இலங்கையில், அதுவும் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர், அறுபது ஆண்டுகள் என்ன, மேலும் ஒரு வருஷம்கூட வாழ்ந்தாலும், அரிய சாதனைதான். எனவே, அறுபது வயது வாழ்ந்தவர்களுக்கு விழா எடுத்துக் கொண்டாடுவது சங்கையான காரியம். அத்துடன் பிரேம்ஜி 'தானும்-பெண்டிலும்-தட்டானும்' என்று வாழ்ந்தவரல்லர். நாற்பது ஆண்டு காலமாக வெகுஜன இயக்கம் ஒன்றுடன் இணைந்து பொதுவாழ்வின் பிரக்ஞையுடன் வாழ்ந்தவர். கட்சிவிட்டுக் கட்சி தாவுதல் இலங்கையில் சர்வசாதாரணம். முன்னாள் பிரதமர் டபிள்யூ. தஹநாயக்கா அங்கம் வகித்த கட்சிகளை பட்டியல் போட்டுப் பாருங்கள். அவ்வளவு ஏன்? ஒரு காலத்திலே 'முட்டிக் காசு' ஏ.ஈ., குணசிங்காவின் தொழிற் கட்சிக்குக் கொடிபிடிச்ச பிரேமதாஸா தானே இன்றைக்கு யூ.என். பி. ஜனாதிபதி. சரியோ தப்போ, ஒரே கட்சியின் அணியிலே நின்று நாற்பது ஆண்டு காலமாக பிரேம்ஜி பணிபுரிதல் சாதனைதான். அகில உலக ஆனைப்பந்தித் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஆயுட்காலத் தலைவராக இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் நிகழ்த்திய சாதனையை பிரேம்ஜி நெருங்கிக் கொண்டிருக்கின்றார் என்பதும் பெருமைக்குரியது. எனவே, அவருடைய சாதனையை அவருடைய அணியைச் சேர்ந்தவர்கள் மட்டும் அல்லாமல், ஏனையோரும் பாராட்டுதல் தக்கது. சந்தேகமில்லை. 'பிரேம்ஜியை வாழ்த்தி நாமும் ஒரு தந்தியை அனுப்பி வைப்பம்' என்று கொ.சு. நினைத்துக் கொண்டார். தந்தி யாழ்ப்பாணத்திலிருந்து தபாலிலே போனாலும், கொழும்புக்குப் போனதும் தந்தியாக மாறிவிடும் என்று நினைத்துச் சமாதானமும் அடைந்தார்.

உணர்ச்சி மயமாக இப்படிச் சிந்தித்துக் கொண்ட சுப்பர், சற்று நிதானமாக, தாம் மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர் என்கிற நக்கீர வாரிசு நிலையில், விமர்சனப் பாங்குடன் வாசித்தபொழுது, மேலும் சில விஷயங்கள் அவருடைய மனதிலே நியாய பூர்வமாக எழுந்தன.

இலங்கை முற்போக்கு இயக்கம் என்பது என்ன? அரசியல் ரீதியான முற்போக்கு இயக்கத்தின் பிதாமகர்களென டாக்டர் விக்ரமசிங்கா, டாக்டர் என்.எம். பேரேரா, பிலிப் குணவர்த்தனா ஆகிய மும்மூர்த்திகளே இன்றளவும் வரலாற்று ரீதியாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றார்கள். இதனை ஆட்சேபிக்கும் சின்னப்புத்தி பிரேம்ஜிக்கு இல்லை. எனவே, 'முற்போக்கு இயக்கம்' என்பதை 'இலங்கை முற்போக்குத் தமிழ் இலக்கிய இயக்கம்' என்று சற்று விரிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அப்படியென்றாலும் எங்கேயோ உதைக்கின்றது.' செய்யும் தொழிலுக்கு, சாப்பிடும் சோற்றுக்கு விசுவாசமாக இருந்தவர் பிரேம்ஜி. இது ஒரு பெரிய பிளஸ் பாயிண்ட். ஆயிரக்கணக்கான மொழிபெயர்ப்புக்கட்டுரைகளினால், 'சோவியத் நாடு' உட்படப் பல பத்திரிகைகளை 'ரொப்பி' இருக்கிறார். உண்மை. ஆனால், இவை சோற்றுச் சமாசாரங்கள். தமிழ் இலக்கிய வளத்திற்கு, அதுவும் முற்போக்குத் தமிழ் இலக்கிய வளத்துக்குப் பங்களிப்புச் செய்வதாகச் சொல்லி, ஒரு புத்தகந்தானும் எழுதி அந்த இயக்கத்தினைக் கொச்சைப் படுத்தும் பாவத்தினை பிரேம்ஜி என்றுமே செய்ததில்லை. இந்தத் தொண்டும் மெச்சத் தக்கதே. இன்னும் ஒன்று. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்றால் பிரேம்ஜி; பிரேம்ஜி என்றால் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்று கூறும் அளவுக்கு முப்பத்தைந்து ஆண்டு காலமாக வாழ்ந்த சாதனையாளர். மு.எ. சங்கத்தின் முன்னோடி நாயகன் என்று சொல்வது தப்பு. அவருக்கு முன்னாலும் நாயகன் தோன்றவில்லை, பின்னாலும் நாயகன் தோன்றவில்லை, என்று டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் தமிழிலே சொல்லி மகிழலாம். அவர் ஏக நாயகன்! சந்தேகமில்லை. இதற்



காகவே நூறு கிலோ ரோஜாப்பூ மாலை சூட்டி மகிழலாம்.

ஆனால், வேறு சில சங்கதிகள் சுப்பருக்கும் பிடிபடவில்லை. இப்பொழுது சாதாரண 'முடி' களையே காணுவது கஷ்டம் என்பது 'மல்லிகை'ப் பந்தல் போட்ட 'டொமினிக் ஜீவா'வுக்கே தெரியும். இதற்குள் 'கொடுமுடிகள்' எங்கே முளைத்தார்கள்? 'தனிச்சிங்களம்' என்ற கொள்கையை தோழர் பொன். கந்தையா எம்.பி.யாக இருந்த காலத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டது. அப்படியானால், சிங்கள ஆதரவாளர்கள் யாருமே இனி வெறியர்களாக மாட்டார்கள் என்பது பொழிப்பு. காங்கேசன் துறைத் தொகுதியிலே வி. பொன்னம்பலத்தை 'தந்தை செல்வா'வுக்கு எதிராகப் போட்டியிட வைத்ததுதான் மு.எ. சங்கம் நடத்திய இன வெறிக்கு எதிரான கடைசியான உருபு வாய்ந்த செயல் என்பது வரலாறு. இந்தக் குழப்ப நிலையில் 'எரிசரமாக...இமாலயப் பணி' என்ற சொற்றொடர்களை கொ.சு. இணைத்துப் பார்த்தார். அவர் மூளை கசங்கிச் சாம்பியது. ரூஷியாக்காரன் யப்பான்காரன் ஒருவனை விண்வெளிப் பயணத்திற்குக் கொண்டு சென்றதாக வந்த செய்தி குறுக்கிழையிலே பாய்ந்தது. எரிசரம் என்றால் **Rocket**...'ஓகோ... யப்பான்காரனுக்கு அடுத்ததாக விண்வெளிப் பயணத்திற்கு ரூஷியக்காரர்கள் நமது பிரேம்ஜியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்' போலும் என்று நினைத்த பொழுது...'ஓமோம் ... எரிசரம் மூலம் விண்வெளிப் பயணம் செய்வது இமாலயச் சாதனை தான்..,அப்படி ஒரு கௌரவம் பிரேம்ஜி மூலம் தமிழ் எழுத்தாளர்களுக்குக் கிட்டுமானால், உலகம் முழுவதும் பரந்துவாழும் அத்தனை தமிழ் எழுத்தாளர்களும் குதூகலமாகவும் கோலாகலமாகவும் பிரேம்ஜிக்கு விழா எடுத்தல் மிகவும் நியாயமானது' என்று கொ.சு. நினைத்துக் கொண்டார். இந்த நியாய போதகத்தினால். கொண்டாடி சுப்பருக்கு ஒரு போத்தல் 'கல் அரக்'கினை ஒரே மடக்கில் அடித்ததிலும் பார்க்க வேகமான 'கிக்' ஏற்பட்டது!

மனைவி வக்கணைச் செல்லாச்சியின் அட்டகாசங்களைப் பற்றி இல்லிப் போலையும் கவலைப்படாமல், இன்னொரு நெருப்புக் குச்சியினைச் செலவு செய்து, நூர்ந்து போயிருந்த தாவடிப் புகையிலைச் சுத்தினை மீண்டும் பற்ற வைத்துக் கொண்டு, புகையின்பத்தின் மூலம் வான மண்டலத்திலே மிதக்கலானார் கொண்டோடி சுப்பர்! 'இது என்னுடைய எரிசரமும்...இமாலயச் சாதனையும்' என்று நினைத்த கொ.சு, 'இதைப் பற்றி நாலு வரி எழுத எனக்கும் ஒரு ஜால்ரா இருக்கிறானா' என்று யோசித்த வண்ணம், 'சுத்'திலே இன்னொரு 'தம்' இழுத்தார். ✱

*With Compliments*

**S. RAVEENDRAN**

BARRISTER & SOLICITOR
SOLICITOR (ENGLAND)
ATTORNEY-AT-LAW (SRI LANKA)

**Now Practising As**

# RAVI, JAMES AND ASSOCIATES

**558, SYDNEY ROAD,**
**BRUNSWICK - 3056**

Phone : (03) 388 - 2091 Fax : (03) 388 - 2092

'வீடும் வீதியும்'

# தமிழச்சி தரிசனம்

**க. கலாமோகன்** பாரிஸ்

பாரிஸிலே வாழும் க. கலாமோகன், கலை-இலக்கியம் பற்றித் தமது மனத்துக்கு உவப்பென வரித்துக் கொண்ட சில தர்மங்களைப் பின்பற்றுவதிலே அழுங்குப் பிடியராகக் திகழ் கிறார். 'எழுத்து எனது இலட்சியமல்ல. சமூகத்துள் புதைக்கப் பட்ட, புதைந்துபோன அவலங்களிற்கும், ஓலங்களிற்கும் பின்னே கிடக்கிற சத்தியத்தை வெளியே கொண்டுவர அது ஒரு ஆயுதம் என்று கருதுவதாலேயே எழுதுகின்றேன்' என்று அவர் அண்மையில் எழுதி வெளியிட்டுள்ள **'வீடும் வீதியும்'** என்னும் நாடக நூலின் முன்னுரையிலே தைரியமாகப் பிரகடனப்படுத்துகின்றார். அந்த நாடகம், ஈழத் தமிழர் மத்தியிலே உருவான புத்தி ஜீவிகளை புதிய கோணத்திலே தரிசிக்கின்றது. இந்தத் தரிசனம் கூர்மையானது மட்டுமல்லா மல், சத்தியமானதுங்கூட. அதே சமயம், அந்த நாடகம் ஒரு பெண்ணின் திருமணப் பிரச்சினையை மிக யதார்த்தமாகவும், அதே சமயம், மனித நேயத்துடனும் விசாரணை செய்கின்றது இந்த விசாரணை, மணமின்றி அவலமுறும் தமிழச்சிகளை புதிய கோணத்திலே தரிசிக்கவும் உதவுகின்றது. கலாமோக னின் அக்கறை சத்தியமானது என்பதற்கு அவருடைய சமர்ப் பணம் அச்சாவாகக் கட்டியங் கூறுகின்றது. **சமர்ப்பணம்: '1989ஆம் ஆண்டு. பாரிஸில், ஒரு ஹோட்டல் அறையில், தமிழ் பேசும் இளைஞர்கள் சிலரால் விலைபேசி அழைக் கப்பட்டு வந்து அவர்களது மிருக வெறிக்கு முன் தனது உடலையும், உயிரையும் பலியாக்கிய-முகவரியும், பெய ரும் தெரியாத ஆபிரிக்கப் பெண்ணின் நினைவின் முன் எனது படைப்பைச் சமர்ப்பிக்கின்றேன்.'** முகம் தெரியாத, பெயர் தெரியாத, முகவரி தெரியாத ஓர் ஆபிரிக்கப் பெண் ணிற்காக இரங்கும் கலாமோகன், தமிழச்சிகளின் துயர்களுக் காக...அவர் தமது நாடகத்திலே அறிமுகப்படுத்தும் தமிழச்சி யின் பெயர்: சாருமதி.

-ஆசிரியர்

சாருமதிக்காக வாதாடுவ தென்பது, தமிழ் பேசும் சமூகத் துக்குள் தமது அடிப்படை உரிமைகள் எதுவென்று கூடத் தெரியாமல் செத்துக் கொண் டிருக்கும், சீதனச் சந்தையிலே சுரண்டப்பட்டுக் கொண்டிருக் கும் ஆயிரக்கணக்கான பெண் களுக்காக வாதாடுவதென்பதா கும். சுரண்டும் வர்க்கமும், சுரண்டப்படும் வர்க்கமும், படித்த வர்க்கமும், படிக்காத வர்க்கமும், இவையனைத்துமே பெண்களை மனித உரிமை களுக்கு விரோதமாகவே நடத் திக் கொண்டிருக்கின்றன. இனம், மதம், மொழி (தேசியம்) இவற் றின் பேரால் பெண்களின் அடிப் படை உரிமைகள் அனைத்திற் கும் ஒவ்வொரு நாளும் வேட்டு கள் வைக்கப்பட்டுக் கொண் டிருக்கின்றன. இளமையைத் தொலைத்த இந்தப் பெண்களின் தலைகளின் மீது ''காலம் பூரா வும் நீ கன்னியாகவே வாழு'' என்ற கொடுமை சுமத்தப்பட் டிருக்கின்றது.

தமிழ் பேசும் சமூகத்தில் பெண்களின் பெறுமானம், விலை எவை என்பதை அச்சொட்டாக விளக்க சில தனிப்பட்ட உதா ரணங்களைத் தருகின்றேன். சில ஆண்டுகளுக்குமுன், பாரிஸ் **Gare Du Nord** ரயில் நிலையத் தில், தமிழ் பேசும் இளைஞன் ஒருவனோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது, ''உனக் குக் கலப்புத் திருமணத்தில் நம்

---

**காத்திருத்தல் !**

அவர்கள் பேசுவார்கள்
அவர்கள் பேசுகிறார்கள்
அவர்கள் பேசிவிட்டார்கள்
அலை மட்டும் ஓயவில்லை
அமெரிக்க
ஐரோப்பிய
இயந்திர தடாகங்களில்
நம்மவர்களே
நம்மவர்களை
அழிப்பதற்காய்
நவீன மயமாய்
ஆயுதப் பூக்கள் !
இடையில் குட்டிச்சுவராய்
போய்விட்ட
இலங்கை பொருளாதாரம்
ஓ... என் இலங்கை
ஓய்ந்துவிட்டது
பேசமுடியாமல்
சிரிக்கமுடியாமல்
அப்படி ஒரு திணறல் !
மௌனங்களை
தேடிச் சென்று
முடங்கிவிட்ட அறிவு ஜீவிகள்
வாய் பேசாமல்
ஒதுங்கிக் கொண்ட ஒரு
கூட்டம்
பெரும் சப்தங்களால்
கவரப்படாமல்
நியதியென
உண்ணல்
உறங்கல்
புணர்தல்
என ஒரு கூட்டம் !
இன்னும் என் அம்மா
அரிசிக்கும் சீனிக்கும்
ஆலாய்ப் பறக்கிறாள்
அவர்கள் மீண்டும்
நாளை பேசுவார்கள் !

- நவம் அரவிந்தன்
ஜெர்மனி

பிக்கையுண்டா?'' என்று கேட்டேன். அதற்கு அந்த இளைஞன், ''அண்ணை, என்ன இருந்தாலும் எங்கடை பெட்டையளை முடிக்கிறது நல்லது'' என்றான். ''ஏன்?'' என்று கேட்டேன். ''எங்கடை பெட்டையளை முடிச்சமெண்டா, அவளவை எங்கடை சொல்லுக்குப் பணிஞ்சு நடப்பாளவை. சோலி சுறட்டொண்டும் இருக்காது'' என்று விளக்கம் வந்தது. தமிழ் பேசும் சமூகத்தில் ''காதல்'' என்ற ஒன்று இருந்தாலும், பெண் ''கண்ணகி''யா என்பதை தீர்மானிப்பது அம்மியும், அருந்ததியும்தாம். காசும் வேண்டும்; பெண் ''கண்ணகி'' யாகவும் இருக்க வேண்டும் என்பது எங்களது திருமணங்களின் அடிப்படைக் 'கொண்டிஷன்கள்'. இன்னொரு சந்தர்ப்பத்தில், ஒரு முற்போக்குவாதியிடம் கலப்புத் திருமணம் பற்றிய கேள்வியைக் கேட்டேன். ''எங்களுக்கெண்டு ஒரு கலாசாரம் இருக்கு. நாங்கள் உப்பிடியெல்லாம் கலந்து எங்கடை முகவரிகளை அழிச்சுக் கொள்ளக் கூடாது'' என்று பதில் சொன்னார்.

ஐரோப்பாவிற்குக் ''கண்ணகி''கள் இறக்குமதி செய்யப்படுகிறார்கள். அகதிப் பயணம் மேற்கொண்ட முதலாவதுநாளே நான் இந்தச் சங்கதியைத் தெரிந்து கொண்டேன். பம்பாய் விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது, பிரான்ஸ் போவதற்காகக் காத்து நின்ற ஒரு பெண்ணைக் கண்டு நான் திகைப்படைந்தேன், காரணம், அவளது கழுத்தை மறைத்திருந்த தங்க நகைகள் தாம். எந்தப் பயமும் இல்லாமல், இவ்வளவு நகைகளோடும் வந்துள்ளாளே என்ற ஆச்சரியம். அந்தப் பெண்ணை அண்மித்து, ''உங்கள் தந்தை என்ன நகைக் கடையா வைத்திருக்கின்றார்?'' என்று கேட்டேன். அவளது முகம் ஒரு தரம் சுருங்கிக் கொண்டது. பின்னர் விளக்கம் வந்தது. ''இல்லை, நான் கலியாணம் முடிக்கப் பிரான்ஸுக்குப் போறன். எனக்கெண்டு பேசப்பட்டவர் அங்கைதான் இருக்கிறார். அவர் கேட்ட சீதனக் காசை இஞ்சையிருந்து காசாக் கொண்டு போறது கஷ்டம், அதுதான் அவர் நகையாப் போட்டுக் கொண்டு வரச் சொன்னவர். தெரியும்படி நகை போட்டுக் கொண்டு வந்தா டெக்ஸ் ஒண்டும் இல்லையெண்டு அவர் கடிதம் எழுதினவர்.''

''அவரை உங்களுக்குத் தெரியுமோ?''

''இல்லை, போட்டோவில மட்டுந்தான் பாத்தனான்'' நான் அனைத்தையும் விளங்கிக் கொண்டேன்.

ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக வந்தவர்கள், அவர்களது தளங்கள் வித்தியாசப்பட்டாலும், அடிப்படையில் தங்களை மாற்றிக் கொள்ளாமலேயேயுள்ளனர். இதனை ஒரு பெருமைக்குரிய விஷயமாகக் கருதுவதுடன், அனைத்து சமூக ஊழல்களையும் அச்சொட்டாகக் காப்பாற்றி வருகின்றனர். இங்கே, சாதி, சமயம், மொழி வெறி, இனவெறி, சீதனப் பசி அனைத்துமேயுண்டு. இவற்றைக் கட்டிக் காப்பது ''பெருமை''க்குரிய விஷயம் தான். சீதன வியாபாரம் இங்கே நவீனப்படுத்தப்பட்டுள்ளது. தங்கம் இங்கே மலிவாக இருப்பதால், சீதனச் சந்நிதானத்தில் அது பூஜிக்கப் படுகின்றது. அகதிக் கார்ட் கிடைத்தால் அதற்கென ஒரு தனி ரேட். கிடைக்காது விட்டால் கொஞ்சம் குறையும்; அவ்வளவுதான். இவற்றைவிட பெண்களின் ''கற்பை''ப் பரிசோதிக்க அம்மிகளும், அருந்ததிகளும் நிறைய உள்ளன.

முற்போக்கு முகாம்களைப் பொறுத்த மட்டில் சீதனக் கொடுமையோ, சாதிக் கொடுமையோ முக்கியமான விஷயங்கள் அல்ல. சீதனம், சாதி இவற்றைப் பற்றிப் பேசுவதோ அல்லது எழுதுவதோ, இவர்களைப் பொறுத்த மட்டில் இழுக்கு என்று கருதப்படுகின்றது. ஏனெனில், இது இவர்களின் பாஷையில் 'சீர்திருத்த வாதம்' என்று மொழி பெயர்க்கப்படுகின்றது. இதற்கும் புரட்சிக்கும் எந்தச் சம்பந்தமுமேயில்லை என்பது இவர்களது கோஷம். ஆனால், இந்த விஷயங்கள் தமிழ்பேசும் சமூகத்துள் வளர்ந்து கொண்டு போகும் யதார்த்தம் என்பதை மறுதலித்து எந்தப் புரட்சியையுமே நடத்திவிட முடியாது. பொழுது போக்கிற்காக இவர்கள் பேசும் ''புரட்சி'' வந்து, இந்த அவலங்களை நிர்மூலமாக்கிவிடும் என்பது சுத்தமான கற்பனாவாதம், மூன்றாம் உலக நாடுகளின் சமூக கட்டமைப்பும் முதலாளித்துவ நாடுகளின் கட்டமைப்புகளும் ஒன்றல்ல என்ற ''ஞானம்'' இவர்களுக்கு வந்தாக வேண்டும். இந்த இரண்டு சமூகங்களுக்கிடையேயும் நிகழும் விவாதங்கள் ஒன்றல்ல, மிகவும் வித்தியாசமானவை, பாய்ந்து விழுந்து எதையுமே சாதித்து விடமுடியாது.

எனது இந்த அபிப்பிராயங்கள் விஞ்ஞான ரீதியான அடித்தளங்களைக் கொண்டிருப்பது மட்டும் அல்ல, விவாதத்திற்குரியனவுங்கூட. சமூக ஒழுங்குடன் சம்பந்தப்பட்டது. எனது விஞ்ஞானம். மனிதன் சிந்திக்கும் ஆற்றல் உள்ளவன் என்பதால் தான் நான்சமூக ஒழுங்கு என்ற கோட்பாட்டை வலியுறுத்துகின்றேன்.

உலகம் ஒரு சமூகம். உலகில் வாழ்பவர்கள் மனிதர்கள். மனிதம் பற்றிய ஒரு தத்துவார்த்தப் பிரக்ஞையின்றிச் செய்யப்படும் அனைத்துப் படைப்புகளும் சமூக இயக்கத்திற்கு எதிரானவை என்பது எனது கோட்பாட்டுத் தடம். ✻

# நேசம் நாடும் நெஞ்சங்கள்

## லெ. முருகபூபதி

(புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் பல நாடுகளிலும், பொதுப் பணிகள் ஆற்றிடவும், ஈழத்தமிழ் மண்ணிலே புனரமைப்புப் பணிகள் செய்திடவும் பல நிறுவனங்களைத் தோற்றியுள்ளதாக அறிகின்றோம். தர்மம்என்பது குழு நலன்களுக்கு அப்பாற்படப் பேணப்படுதல் சங்கையானது என்பது **'அக்கினிக் குஞ்சு'** வின் கருத்தாகும். எனவே, சகல நாடுகளிலும் இயங்கும் பொதுப்பணி மன்றங்கள் குறித்த செய்திகளை இந்தப் பகுதியிலே வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். உங்கள் உங்கள் பகுதிகளிலே செயற்படும் மன்றங்கள் பற்றிய தகவல்களை அறியத்தந்தால், உவகையுடன் இந்தப்பகுதியிலே பிரசுரிப்போம்.)

**இலங்கையில்** தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்ததன் விளைவாக - உயிரிழந்தோர் - அனாதைகளானோர் அகதிகளாக நாடு விட்டு நாடு ஓடியோர் - சொத்து சுகங்களை இழந்தோரின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

அன்னையை - தந்தையை - மூத்த சகோதரர்களை ஆயுத அரக்கர்களினால் பறிகொடுத்த அனாதைப்பிள்ளைகள் இன்று நிழல் தேடும் நெஞ்சங்களாக எமது தாய் மண்ணில் அவலப்படுகின்றனர்.

உயர்தரக் கல்விக்கு வேட்டு விழுந்தமையால் - எம் இளைஞர் பரம்பரை ஆயுத வேட்டுக்களில் நம்பிக்கை வைத்தனர்.

வேட்டுச் சத்தங்கள் ஓய்ந்து அமைதிப் புறா எம் தாய் மண்ணில் சிறகடித்துக் கொண்டிருக்குமேயானால் -நாம் இன்று இப்படி அகதிகளாக பரதேசம் சுற்ற வேண்டியதில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினைகளை காரணம் காட்டி அந்நிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள நம்மவர்களுக்கு ஒரு முக்கியமான தார்மீகக் கடமையுண்டு.

''சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்காரடி'' - என்று பாரதி பாடிய பாடலை பொய்யாக்க வேண்டுமானால் -அந்நியம் புகுந்துள்ள நம்மவர்கள் அங்கு அனாதைகளாகியுள்ள பிள்ளைகளுக்கு ஏதேனும் வழியில் உதவத்தான் வேண்டும்.

இந்த உன்னத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உலகின் பல பாகங்களிலும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் ஆன்மீக ஆறுதல் நாடி சேவை நிறுவனங்கள் சிலவற்றை நிறுவியுள்ளார்கள். அவற்றுள் ஒன்று அவுஸ்ரேலியாவிலே குடியேறியுள்ள ஈழத்தமிழர் உருவாக்கியுள்ள 'இலங்கை மாணவர் நம்பிக்கை நிதியம்' ஆகும்.

அவுஸ்ரேலியாவில் வதியும் தமிழ் அன்பர்கள் பலர் இலங்கையில் தமிழ் மண்ணில் அனாதைகளாகியுள்ள பல பிள்ளைகளின் ஞானப் பெற்றோர்களாகி தொடர்ந்து உதவ முன் வந்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த இயக்கம் புலமைப் பரிசில் திட்டமாக உருவாகி வளர்ந்து வருகிறது.

இப்பணிக்கு உதவி - அந்நியம் வாழும் ஒவ்வொரு தமிழ் இனப் பிரஜைகளும் - ஒவ்வொரு அனாதைப் பிள்ளைகளுக்கும் உதவ முன் வருமாறு அறைகூவல் விடுக்கின்றோம்.

தற்போது அவசர உதவிக்காக

- மட்டக்களப்பு
- யாழ்ப்பாணம்
- திரிகோணமலை
- கிளிநொச்சி
- முல்லைத் தீவு
- மட்டக்களப்பு அம்பாறை

மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளனவாம்.

இதற்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் பின் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

**CEYLON STUDENT'S TRUST FUND**

**P. O. BOX 317**

**BRUNSWICK VICTORIA - 3056**

**AUSTRALIA**

# தோணி



## வ. அ. இராசரத்தினம்

கரு நீலமாகப் பரந்து கிடக்கும் வங்காள விரிகுடாவைப் பார்த்தவாறு எங்கள் கிராமம் இருக்கிறது. கிராமம் என்றா சொன்னேன்? பூமி சாத்திர, சமூக சாத்திர நியதிப்படி கிராமம் என்றால் எப்படியிருக்குமென்று எனக்குத் தெரியாது. சோழகக் காற்றுச் சரசரத்துக் கொண்டிருக்கும் தென்னை மரங்களடியிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏறக்குறைய முப்பது ஓலைக் குடிசைகள் இருக்கின்றன. ஒரு குடிசையிலிருந்து மற்றக் குடிசைக்குப் போகப் பெண்களின் தலைவகிடு போல ஒற்றையடிப் பாதைகள் செல்கின்றன. இந்த குடிசைகள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் கிராமம் என்று சொல்கிறேன். சரியோ பிழையோ? உங்கள் பாடு.

எங்கள் குடிசைக்கு முன்னால் தென்னை மரங்கள் இரண்டைச் சேர்த்து நீண்ட கம்பு ஒன்று எப்போதும் கட்டப்பட்டிருக்கும். அதிலேதான் தூண்டிற் கயிறுகளையும் தோணியைச் செலுத்த உதவும் சவளையும் என் தந்தையார் வைப்பது வழக்கம். அதன் கீழே தென்னை மரத்தினடியிற் பென்னம் பெரிய குடம் ஒன்று இருக்கும். அந்தக் குடத்திலே தண்ணீர் எடுப்பதற்காக ஒற்றையடிப் பாதை வழியாக அம்மா அடுத்த குடிசைக்குப் போகும் போதெல்லாம் நானும் கூடப்போயிருக்கிறேன்.

அநேகமாகக் காலைவேளையில் அம்மாவும் அப்பாவும் வீட்டில் இருக்கமாட்டார்கள். அப்பா கோழி கூவும் போதே எழுந்து கடலுக்குப் போய்விடுவார். அம்மாவிற்கு வெளியே என்ன வேலை இருக்குமோ, என்னால் ஊகித்துக் கொள்ள முடியாது. ஆனால், அம்மா வீட்டிற்கு வரும்போதெல்லாம் பனையோலைப் பெட்டியில் அரிசியும், மரவள்ளிக் கிழங்கும், தேங்காயும் கொண்டு வருவதை நான் பார்த்திருக்கிறேன். அம்மா வீட்டுக்கு வந்து சிறிது நேரத்திற்கெல்லாம், அப்பாவும், தூண்டிற் கயிறுகளோடும், சவளோடும், மீன் கோவையோடும் வீட்டுக்கு வந்து விடுவார்.

அப்பாவும் அம்மாவும் வீட்டிலில்லாதநேரங்களில் ஒரே குஷிதான்! ஏறு வெய்யிலின் மஞ்சட் கிரணங்கள் சரசரக்கும் தென்னோலைகட்கூடாகவும், முகடு பிய்ந்து கிடக்கும் எங்கள் வீட்டுக் கூரைக் கூடாகவும் துள்ளிப் பாய்ந்து நிலத்தில் வெள்ளித் துண்டுகளைப்போல வட்ட வட்டமாக ஒளியைச் சிந்தும். அந்த வட்ட ஒளியை நான் என் கையால் மூட, அந்த ஒளி என் புறங்கையில் விழ, அடுத்த கையால் நான் அதை மறைக்க, அவ்வொளி அடுத்த கையிலும் விழ, நான் கைகளை ஒளி விழுமாறு உயர்த்தி உயர்த்திக் கொண்டே போவது எனக்குப் பிடித்தமான விளையாட்டாக இருக்கும். ஆனால் கூரைக் கூடாக ஒளி பாய்ந்து வரும் துவாரம், என்னால் எட்ட முடியாத உயரத்தில் இருக்கிறபடியால் நான் என் விளையாட்டை முடித்துக்கொள்வேன்.

குடிசைக்கு வெளியே வந்தால், அங்கே பக்கத்து வீட்டிலிருந்து என் நண்பன் செல்லனும் வந்திருப்பான். செல்லன் என்னைவிட நோஞ்சான். பாய்மரக் கம்பு போல நீளமாக இருப்பான். இன்னமும் ஐந்தாறு வருடம் சென்றால் அவன் தென்னை மரத்து வட்டைத் தொட்டுவிடுவான் என்று என் அம்மா கூட அவனைப் பரிகசிப்பதுண்டு.

'தோணி' சிறுகதை ரஷ்ய- மற்றும் மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட 'அக்கரை இலக்கியம்' நூலிலும் இடம் பெற்றுள்ளது. 1962ஆம்ஆண்டில் ஈழத்தில் வெளிவந்த சிறந்த சிறுகதைத் தொகுதியாக ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின்பரிசினை இந்நூல் பெற்றது.

செல்லன் வந்ததும், நான் எங்கள் வீட்டுப் படலையை இழுத்துச் சாத்திவிட்டு, அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே ஆற்றங்கரைக்கு ஓடுவேன்.

ஆற்றங்கரை, வீட்டிலிருந்து அதிக தூரத்திலில்லை. வங்காளக்கடல் சிறிது உள்ளே தள்ளிக் கொண்டு வந்து ஒரு சிற்றாறாக எங்கள் கிராமத்திற்கூடாகச் சென்று கொண்டிருந்தது. இந்த ஓடையில் பூரணையன்று வெள்ளம் வரும்போது தண்ணீர் எங்கள் வீட்டு முற்றத்திற்கே வந்துவிடும்.

அந்த ஆற்றங்கரையின் ஓரமாக, ஆற்றில் நீண்டு வளர்ந்த கோரைப்புற்கள் சடைத்துக் கிடக்கின்றன. அந்தப் புற்களினடியில் நீருக்குள் ஓசைப்படாமல் இரு கைகளையும் கூட்டி வைத்து இறால் பிடிப்பதில் எங்கட்கு பரம திருப்தி; என்றாலும் இந்த விளையாட்டில் எங்கட்கு அலுத்துப் போய்விடும். அதன் பின், நாங்கள் நேரடியாகக் கடற்கரைக்கே போய்விடுவோம்.

கடற்கரையில் கச்சான் காற்று சுழற்றி சுழற்றி அடிக்கும். அந்தக் காற்றில் இராவணன் மீசைகள் எல்லாம் நிலத்தில் பட்டும் படாமலும் உருண்டு உருண்டு, பந்தயக்குதிரை போல வேகமாக எங்களை நோக்கி ஓடி வரும். அவைகளைத் துரத்திப் பிடிப்பதற்காக நானும் செல்லனும் எங்கள் அரையில் கட்டியிருக்கும் துண்டைக் கழற்றிக் கழுத்தை வளைத்துப் போட்டுக் கொண்டு கோவணத்தோடு ஓடுவோம். இரண்டு மூன்று இராவணன் மீசைகளைத் துரத்திப்பிடித்த பின், அந்த விளையாட்டிலும் எங்கட்கு அலுப்பு ஏற்பட்டுவிடும்.

அதன்பின்னால், நாங்கள் இருவரும் கடற்கரை வெண்மணலில், மதாளித்துப் படர்ந்து கிடக்கும் அடம்பன் கொடிகளின் மேல் குந்திக் கொள்வோம். பதை பதைக்கும் வெய்யிலில் அந்த அடம்பன் கொடி மெத்தை எங்களுக்கு ''கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தரு'' வாகத் தான் இருக்கும். அந்தப் பட்டு மெத்தையின் மேல் வீற்றிருந்து கொண்டு எதிரே கடவுளைப் போல ஆதியும் அந்தமும் அற்றுப் பரந்து கிடக்கும் கருநீலக் கடலிலே அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாய் விரித்தாடும் பாய்த் தோணிகளைப் பார்த்துக் கொண்டிருப்போம்.

கடற்பரப்பிலே வெள்ளைச் சீலைப் பாய்கள் வட்டவட்டமாக, வண்ணாத்திப் பூச்சிகளைப் போல அழகாக இருக்கும். அவைகளில் ஒன்றில்தான் என் தகப்பனார் இருப்பார். ஆனால் எதிலே அவர் இருக்கிறார் என்று திட்டமாக எனக்குத் தெரியாது. எனினும் ஏதாவது ஒரு தோணியைக் குறிப்பிட்டு, அதில்தான் அவர் இருப்பதாக எண்ணிக் கொள்வேன். அந்த நம்பிக்கையில், முகத்தில் 'சுள்' என்றடிக்கும் சூரியக் கிரணங்களை நெற்றிப் பொட்டில் கைகளை விரித்து மறைத்துக்கொண்டு அந்தத் தோணியையே பார்த்துக்கொண்டிருப்பேன். அந்தச் சமாதி நிலையில், என்னுள்ளே இன்பகரமான கனவுகளெல்லாம் எழும். இன்னும் சில நாட்களில் நான் பெரியவனாகி விடுவேன்; அப்போது, அப்பாவிற்குப் போல, எனக்கும் ஒரு தோணி சொந்தமாக் கிடைத்துவிடும். அந்தத் தோணிக்கு வெள்ளை வெளேரென்று அப்பமுக்கில்லாத ஒரு பாயைப் போட்டுக்கொண்டு நான் கடலிற் செல்வேன்; ஒரு தென்னைமர உயரத்திற்கு எழுந்து வரும் கடல் அலைகளில் என் தோணி தாவித் தாவி ஏறி இறங்கிக்கொண்டே செல்லும். எல்லாத் தோணிகளையும்விட வேகமாக ஓடுவதற்காக என் தோணியின் பாய், பெரியதாக இருக்கும். அந்தப் பாய்க்குள் சோழகக் காற்று சீறியடித்துக் கொண்டிருக்கையில், என் தோணி கடற்பரப்பில் 'விர்' ரென்று பறந்து செல்லும். நான் பின்னணியத்தில் தலைப்பாகை கட்டோடு தைரியமாக நின்று சுக்கானைப் பிடித்துக்கொள்வேன்; செல்லன் முன்னணியத்தில் நின்று எனக்கு திசை காட்டுவான். எங்கள் தோணி முன்னே முன்னே ஏறிச்சென்று, கடைசியாய்க் கடல் வானத்தைத் தொடும் இடத்திற்குப் போய் விடும். அங்கே அம்மா இராத்திரிச் சொன்ன கதையில் வரும் ஏழு தலை நாகத்தைக் காண்பேன்.

தூரத்தே நான் குறி வைத்திருந்த தோணி சமீபித்துவிட்டது. அதிலே என் தகப்பனார் தான் இருந்தார். தோணி கரையை அடைந்ததும், அவர் பாயைக் கழற்றி வைத்துத் தோணியை ஓடை வழியாக இழுத்துச் சென்றார். நானும் அவரோடு சேர்ந்துகொண்டேன். பிறகு நாங்கள் எங்கள் வீட்டின் முன்னால் தோணியைக் கரையில் கொறகொற என்று இழுத்து வந்தோம். அப்பா தூண்டிற் கயிறுகளை வளையமாக்கி சவளில் போட்டு என்னிடம் கொடுத்

வ.அ. இராசரத்தினம் கிழக்கிலங்கையின் முன்னணி எழுத்தாளராவர். மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் 'தோணி' சிறுகதைத் தொகுதி, 1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. எம்.ஏ. ரஹ்மானின் அரசு வெளியீடு நிறுவனத்தின் முதலாவது வெளியீடு 'தோணி' நூலாகும். அதிலுள்ள தலைப்புக் கதை இங்கு பிரசுரமாகியுள்ளது.

தார். தோணிக்குள் இருந்த பழஞ் சோற்றுப் பானையையும், மீன் கோவையையும், நங்கூரத்தையும் எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு அப்பா பின்னே வர நான் சவளைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு சப்த சமுத்திரங்களையும் கடந்துவந்த வீரனைப்போல முன்னே நடந்தேன்.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. பசித்தவன் விருந்துண்ணக்கனாக் காண்பதுபோல நானும் தோணியைப் பற்றியே கனாக்கண்டேன். எங்கள் வீட்டுக்கு முன்னாலுள்ள ஓடையில் ஐந்து புத்தம் புதிய தோணிகள் இருந்தன. நான், முன்னணியம் உயர்ந்து சவாரிக் குதிரைபோல இருந்ததோணியின் மேல் ஏறிக் கொண்டேன். வாடைக் காற்றான படியால் எல்லோருடைய தோணிகளும் முன்னேற முடியாமல் கரையை நோக்கியே வருகின்றன. என்னுடைய தோணி மட்டும் எரிந்து விழும் நட்சத்திரம் போல கனவேகமாகக் காற்றை எதிர்த்துப் போகிறது. கலங்கரை விளக்கின் ஒளிகூடக் கண்ணுக்குப் படாத அத்தனை தூரத்திற்கு ஆழ்கடலின் நடு மையத்திற்கே என் தோணி போய் விடுகிறது...

நான் திடீரென்று விழித்துக்கொண்டேன். காலையில் எழுந்தபோதுகூட எனக்குத் தோணியின் நினைவு மாறவில்லை. அன்று நான் ஓடைக் கரையில் பழுதுபார்க்க இழுத்து வைக்கப்பட்டிருக்கும் தோணி ஒன்றைத் தள்ளிக் கொண்டு கடலிற்குப் போவது எனத் தீர்மானித்துக்கொண்டேன். செல்லனை கூட்டிக்கொண்டு போய், இருந்த தோணியை எங்கள் பலத்தையெல்லாம் கூட்டித் தள்ளிப் பார்த்தேன். தோணி அசைய மாட்டேன் என்றது. அப்படியானால் நான் தோணி விடவே முடியாதா? சப்த சமுத்திரங்களையும் என்னால் தாண்ட முடியாதா?

நான் கவலைப்பட்டுக் கொண்டேயிருக்கையில் ஓடையில் முருக்க மரத்துண்டு ஒன்று மிதந்து வந்தது. அதைக் கண்டதும் எனக்கு ஒரே சந்தோஷமாகப் போயிற்று. ஆம்; எனக்கென்று ஒரு தோணி கிடைத்து விட்டது! அந்த முருக்கங்கட்டையை முன்னாலும் பின்னாலும் 'கொடுவாக் கத்தி' யினால் செதுக்கி உள்ளே குடைந்து தோணி ஒன்றைச் செய்தேன். பின்னர், அந்தத் தோணியில் செல்லனையும் ஏற்றிக்கொண்டு என் ஆசை தீருமட்டும் ஓடையில் தோணிவிட்டு விளையாடினேன்.

மதியம் திரும்பிவிட்டது. என் தந்தை கடலிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தார். தோணி விட்டு விளையாடிக் கொண்டிருந்த என்னைக் கண்டதும், ''அடே பயலே! தோணி விடுறியா? அப்படியெண்டா நாளைக்கு என்னோட கடலுக்கு வா'' என்றார்.

அதைக் கேட்டதும் எனக்குச் சந்தோஷம் தாங்க முடியாமற் போய்விட்டது. ''சரியப்பா, நாளைக்கு நானும் வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே, சவளைத் தூக்கிக்கொண்டு முன்னால் நடந்தேன். பெரிய தோணியில் போகப் போகிற ஆனந்தத்தில் என் முருக்கந் தோணியை மறந்துவிட்டேன்.

## 2

**அன்றிரவு** எனக்குத் தூக்கமே வரவில்லை. தென்னோலைச் சரசரப்பும் சிள் வண்டுகளின் கீச்சுக் குரலும் எனக்குக் கேட்டுக்கொண்டேயிருந்தன. படுக்கையிற் புரண்டு கொண்டே ஆனந்தக் கனவுகள் கண்டு கொண்டிருந்தேன். கடைசியாய் எங்கோ ஒரு சேவல் கூவிற்று. அதைத் தொடர்ந்து எங்கள் கிராமத்துச் சேவல்களெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு கூவின. அம்மா எழுந்து கை விளக்கைக் கொளுத்திக்கொண்டு சமையல் செய்யத் தொடங்கினாள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த குடிசைகளிலிருந்து ஒருவர் மற்றவரைக் கூவியழைக்கும் சப்தம் கேட்டது. கடைசியாய் அப்பாவும் எழுந்து, ''தம்பி, டேய்!'' என்று என்னை எழுப்பினார். நான் சுட்ட பிணம் போல வளைந்து நெளிந்து உட்கார்ந்து கொண்டேன். இரா முழுவதும் தூக்கம் இல்லாததினால் கண்ணிமைகள் கல்லாய்க் கனத்து அழுத்தின. ஆனாலும் உற்சாகத்தோடு எழுந்திருந்தேன். அப்பா சோற்றுப்பானை நிறையத் தண்ணீரை ஊற்றி எடுத்துக்கொண்டு நங்கூரம், தூண்டில் கயிறு சகிதம் வெளிக் கிளம்பினார். நானும் சவளைத் தோளில் வைத்துக் கொண்டு புறப்பட்டேன்.

படலையைத் திறந்து வெளியே வந்ததும் முகத்தில் வாடைக் கடுவல் ஊசி குத்துவதைப் போலச் சுளீர், சுளீரென்று அடித்தது. எனக்கு உடம்பெல்லாம் நடுக்கமெடுத்தது. மேல் துண்டை முகத்தை வளைத்துக் கட்டிக்கொண்டு முன்னால் விறு விறு என்று நடந்தேன். தூரத்தே குடிசைக்குள் இருந்த அகல் விளக்குகள் இருளைக் 'குத்து குத்'தென்று குத்தின.

ஓடைக் கரையை அடைந்த போது ஆறு, பரமார்த்த குரு ஏழு சீடர்கள் கண்ட ஆற்றைப் போலத் தூங்கிக் கொண்டிருந்தது. கண்டல் இலைகள் பொட்டுப் பொட்டென்று ஆற்றில் எங்கே போகிறோம் என்ற பிரக்ஞையே அற்ற வண்ணம் போய்க் கொண்டிருந்தன. கோரைப் புற்களின் மேலே சிலந்தி வலை போலப் பனிப்படலம் மொய்த்துக் கிடந்தது.

அப்பா கரையில் இருந்த தோணியை ஓடையிலே தள்ளினார். அதற்குள்ளே சோற்றுப் பானையையும் மற்றைய சாமான்களையும் வைத்தார். உடனே தோணியை ஆற்றிலே விட்டு விட்டுக் கோரைப் புற்களினடியில் 'அத்தாங்கை' வீசி இறால் பிடிக்கத் தொடங்கினார். நான் வெடுவெடுக்கும் குளிரில் வள்ளத்தின் முன்னணியத்தில் ஒடுங்கிப் போய் குந்திக்கொண்டிருந்தேன். கிழக்கே கூரையில் தொங்கும் புலிமுகச் சிலந்தியைப் போல, வானத்தில் விடிவெள்ளி நடுங்கிக் கொண்டிருந்தது. இன்னமும் கீழே கிழக்கு வெளுக்கத் தொடங்கியது.

பறி நிறைய இறால் பிடித்ததும் அப்பா வள்ளத்தில் ஏறிக் கொண்டார். வள்ளமும் சமுத்திரத்தை நோக்கி ஓடத் தொடங்கிற்று. பலாரென்று விடிந்த போது வள்ளம் நடுச் சமுத்திரத்தையே அடைந்துவிட்டது. அப்பா நங்கூரத்தைத் தண்ணீரில் எறிந்துவிட்டு தூண்டிலில் இறாலைக் குத்திக் கடலில் எறிந்தார். நானும் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தேன். சமுத்திராதேவி நிர்க்கதியான தன் குழந்தைகளைத் தன் அலைக்கரங்களை எறிந்து எறிந்து தாலாட்டிக்கொண்டிருந்தாள்.

வெய்யில் ஏறிக்கொண்டே வந்தது. முதுகுத்தோலை உரித்து விடுவது போலச் சுளீரென்று அடிக்கும் வெய்யிலுக்கு ஆற்றாமல் அப்பா தன் சட்டையில் கடல் தண்ணீரை அள்ளி அள்ளி ஊற்றிக்கொண்டேயிருந்தார்.

மதியத்தை அண்மியபோது, நாங்கள் ஆளுக்கு ஐந்து "கருங்கண்ணிப் பாரைகள்" பிடித்துவிட்டோம். என் உழைப்பைக் கண்டு எனக்கே திருப்தி ஏற்பட்டு விட்டது. அந்தத் திருப்தியில் பழஞ் சோற்றைக் கரைத்துக் குடித்த தண்ணீர் எனக்குத் தேவாமிர்தமாகத் தான் பட்டது. வயிறு நிறைந்ததும், நங்கூரத்தைத் தூக்கி வைத்துத் தோணியைத் திருப்பத் தொடங்கினோம். வள்ளம் ஓடிக்கொண்டிருக்கையில் என் உள்ளம் பகற்கனாக் காணத் தொடங்கியது. "இந்தப் பத்துக் கருங்கண்ணிப் பாரைகளைக் கண்டதும் அம்மா சந்தோஷப்படுவா. பக்கத்துப் பட்டினத்துச் சந்தைக்கு அதைக் கொண்டு போனால் பத்து ரூபாய்க்கு விற்கலாம். சந்தையிலே, எதிரே வரும் பொங்கலுக்காகக் கமுகம் பூப்போன்ற பச்சையரிசியும், பாசிப்பயறும், சர்க்கரையும், முட்டி நிறையப் பாலும் வாங்கிக்கொள்ளலாம். 'எங்கள்' வீட்டுத் தென்னை மரத்தின்கீழே புதுப்பானை 'களக் களக்' என்று பொங்கும்போது நான் புது வேட்டியை உடுத்துக் கரும்பைக் கடித்துக்கொண்டு ..

வள்ளம் கரையை அண்மி விட்டது. கடற் கரையிலே புத்தம் புதிய பைசிக்கிளிற் சாய்ந்தவாறு ஒருவர் நின்று கொண்டிருந்தார். சூரிய கிரணங்கள் பைசிக்கிள் தகடுகளின் மேற்பட்டு ஜொலித்தன, அப்பா ஏதோ மந்திர சக்தியால் கட்டுண்டவரைப் போலத் தோணியை அங்கே திருப்பினார்.

தோணி கரையை அடைந்ததும் மீன்களையெல்லாம் பைசிக்கிள்காரரிடம் போட்டுவிட்டுத் திரும்பவும் வீட்டை நோக்கித் தோணியை விட்டார்!

எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

தோணி வந்து கொண்டிருக்கையில் நான் கேட்டேன்: "ஏன் அப்பா மீன்களை எல்லாம் அங்கே போட்டுவிட்டு வருகிறீர்கள்?"

அப்பா சொன்னார்: "அவர் தான் நம் முதலாளி. இந்தத் தோணி--எல்லாம் அவருடையது தான். நாம் மீனைப் பிடித்து அவருக்குத்தான் கொடுக்கவேண்டும்."

"நமக்குக் காசு தரமாட்டாரா?"

"நம் கடனிலே கழித்துக் கொள்வார் விலையை. நமக்குச் சாப்பாட்டிற்காக மேலும் கடன் தருவார்."

"அப்படியானால் நாம் ஒரே கடன்காரராகத்தானே இருக்க வேண்டும்?"

"என்னமோ அப்பா; நானும் தலை நரைக்குமட்டும் உழைத்துவிட்டேன். கடனை இறுக்க முடியவில்லை. நமக்கென்று புதிதாக ஒரு தோணி வாங்கவும் முடியாது."

"எல்லாத் தோணிகளும் அந்த முதலாளியுடையது தானா அப்பா?"

"ஆம், ஓடைக்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் எல்லாமே அவருடைய தோணிகள் தான்."

வள்ளம் ஓடைக்கரையை அடைந்துவிட்டது. நாங்கள் தோணியைக் கரையில் இழுத்து வைத்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தோம். என்னுள்ளே ஒரு பயங்கரமான உண்மை புலனாகியது. இந்தத் தோணி எனக்குச் சொந்தமில்லை. ஆம், தூண்டிற்காரனுக்குத் தோணி சொந்தமில்லை; அப்படியே உழுபவனுக்கு நிலம் சொந்தமில்லை; உலகில் உழைப்பவனுக்கு எதுவும் சொந்தமில்லை.

அன்றிலிருந்து தோணி எனக்குக் கனவுப் பொருள் ஆகிவிட்டது. எப்படியாவது கஷ்டப்பட்டு உழைத்து, ஆகக் குறைந்தது ஒரு தோணியாவது சொந்தமாக வாங்கிக்கொள்ளவேண்டும். அதன்பின் மீன் பிடித்தால் சந்தையில் கொண்டுபோய் நம் இஷ்டத்திற்கு விற்கலாம். பொங்கலுக்குக் கரும்பும், பாலும், பச்சையரிசியும், சர்க்கரையும் வாங்கலாம்... முதலாளிக்குப்

பிடித்த மீனையெல்லாம் கொடுத்துவிட்டு வெறுங்கையோடு திரும்பிவரத் தேவையில்லை...

* * *

**நாட்கள்** கடந்துவிட்டன. நான் பெரியவனாகி விட்டேன். சொந்தத் தோணி இன்னமும் வெறுங் கனவாகவே இருந்து வந்தது. தகப்பனார் வாழ்ந்து வரும் அதே பாதையிற்றான் என் வாழ்வும் போய்க்கொண்டிருந்தது. இந்த வாழ்வில், எனக்கு நேரகாலத்தில் கல்யாணம் முடித்து வைத்துவிட வேண்டும் என்பது அம்மாவின் ஆசை.

ஒருநாட் சாயந்திரம் ஓடைக் கரையில் இராட்டினத்தில் நூல் முறுக்கிக் கொண்டிருந்தேன். மேலே நீலநிறமான ஆகாயம் ஓடையின் தெளிந்த தண்ணீரிலும் விழுந்து பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ஓடை முகத்துவாரத்தில் இருந்த மணல்தீவில் கடற்புட்கள் கூட்டங் கூட்டமாக வந்து விழுந்துகொண்டிருந்தன.

''தண்ணீர் எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று வீட்டுக்குப் போன அம்மாவை இன்னமும் காணவில்லை. எனக்குத் தாகமாயிருந்தது. வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்தேன். கனகம் செம்பிலே தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தாள்.

கனகம் எங்கள் கிராமத்துப் பெண்தான். நீரின் இடைமட்டத்தில் ஆடும் பாசிக்கொடியைப் போல எப்போதும் மென்மையாக ஆடிக்கொண்டுதான் அவள் நடப்பாள். கற்பாரில் நிற்கும் செம்மீனைப் போலச் செக்கச் செவேலென்று அழகாக இருப்பாள். வண்டலிலே மின்னும் கிளிஞ்சல்போல் இருக்கும் அவள் கண்களை] இன்றைக்கு முழுவதுமே பார்த்துக் கொண்டிருக்கலாம்.

அவள் அருகால் வந்தபோது, ''கொஞ்சம் தண்ணி தந்திட்டுப் போறியா?'' என்று கேட்டேன் நான்.

கனகம் ஒன்றும் பேசாமல் என்னிடம் செம்பை நீட்டினாள்.

நான் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கும்போது, அம்மாவும் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்துவிட்டாள். அம்மாவைக் கண்டதும், கனகம் ஏதோ செய்யத்தகாத காரியத்தைச் செய்தவள்போல வெட்கப் பட்டுக்கொண்டுபோய்விட்டாள்.

அம்மா சொன்னாள்: ''என்ன வெட்கமாம் அவளுக்கு, நாளைக்கு அவளைத்தானே நீ கல்யாணம் முடிக்கப் போகிறாய்?''

''போ அம்மா, எனக்கென்று ஒரு தோணி இல்லாமல் எனக்குக் கல்யாணமே வேண்டாம்'' என்றேன் நான்.

''ஏண்டா! அவள் அப்பாவிடம் ஒரு தோணி சொந்தமாக இருக்கிறது. அதை உனக்கே கொடுத்து விடுவார் அவர்'' என்றாள் அம்மா.

நான் யோசித்தேன். எனக்குக் கல்யாணத்திலோ கனகத்திடமோ அக்கறை இல்லாவிட்டாலும் தோணி கிடைக்கப் போகிறதே! தோணி மட்டும் கிடைத்துவிட்டால் என் உழைப்பின் பயனை நானே அனுபவிக்க முடியும். என் குடும்ப வாழ்வும் இன்பமாகவே இருக்கும்...

அதன் பிறகெல்லாம் நான் கனகத்துடன் தைரியமாக நெருங்கியே பழகினேன். மனோகரமான மாலை வேளைகளில், ஓடைக்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் தோணி மூலையில் குந்திக்கொண்டு நானும் கனகமும் எவ்வளவோ கதைத்திருக்கிறோம்! கனகம் எப்பொழுதுமே தன் தோணியைப் பற்றிப் பெருமைப் பட்டுக்கொள்வாள். அந்தத் தோணி அவள் தகப்பனாரின் சொந்தமாக இருக்கிறபடியாற்றான் கனகம் நல்ல சேலை கட்டியிருக்கிறாளாம்; கையில் தங்கக் காப்புப் போட்டிருக்கிறாளாம்! 'அவள் என்றைக்குமே அப்படி இருக்க வேண்டும்' என்று என் மனதுள் எண்ணிக் கொள்வேன்.

ஆனால், இரண்டு வாரத்துள் அந்தத் துக்ககரமான செய்தி கிடைத்தது. கிராமமே பரபரப்படைந்தது. கனகத்தின் தந்தை மீன் பிடிக்கப் போனவர் புயலில் அகப்பட்டு மாண்டு போனார். தோணியும் திரும்பி வரவில்லை...

என் இருதயத்தில் சம்மட்டியடி விழுந்தது போன்றிருந்தது எனக்கு. பாவம்! எனக்குத்தான் சொந்தத் தோணி இல்லையென்றாற் கனகத்திற்குக் கூடவா இல்லாமற் போகவேண்டும்?

இரண்டு மூன்று நாட்கள் கழித்துக் கனகம் கடற்கரைக்கு வந்தபோது அவளை நிமிர்ந்து பார்க்கவே என்னால் முடியவில்லை. அவள் கண்கள் கலங்கியிருந்தன. என்னைக் கண்டதும் அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது அவளுக்கு. விம்மி விம்மி அழத் தொடங்கினாள், என் மடியிற் தலையைப் புதைத்

**மண்வாசனை இலக்கியம் :** மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் நடந்தது. யாழ்ப்பாண வியாபாரி ஒருவர் பஸ்ஸில் அவசரமாக ஏறினார். மட்டக்களப்பைச் சேர்ந்த சண்டியனின் காலைத் தெரியாமல் மிதித்துவிட்டார். இதனால், வாக்குவாதம். ''உன்ரை நாட்டாமைக் குணத்தை நீ வேறு எங்கையெண்டாலும் கொண்டு போய்க் காட்டு,'' என்று யாழ்ப்பாணத்துக்காரர் சொன்னார். மறுகணம், ''என்னடா நான் நாட்டாமையா? ஆரப் பாத்துச் சொல்லுறா?'' சண்டியன் அவர் முகத்தில் அறை விட்டான். யாழ்ப்பாணத்தவர் சண்டித்தனத்தை நாட்டாமை என்றும் மட்டக்களப்பார் மூட்டை சுமக்கும் கூலிகளை நாட்டாமை என்றும் அழைப்பர்.

-இளம்பிறை

துக்கொண்டு, கனகம் என்னிடம் எதை எதிர்பார்த்தாள்?

கனகத்தை மடியில் வைத்துக்கொண்டே நான் எண்ணினேன். என்னிடமோ தோணி கிடையாது. இந்த நிலையில் அவளை நான் சுகமாக வாழ்விக்க முடியாது. என் தகப்பனாரைப்போல நானும் தலை நரைக்கும் வரை உழைத்து, உழைத்துச் சாகவேண்டியதுதான். என்னோடு சேர்ந்து கனகமும் ஏன் சாகவேண்டும்? பாவம் கனகம்.

எனவே கனகத்தை யாராவது சொந்தத் தோணியுள்ள ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டும். என் கண் முன்னால் அவள் அழகான சேலையும், தங்கக் காப்பும் அணிந்துகொண்டு என்றென்றைக்கும் ஆனந்தமாக வாழ வேண்டும். அவள் வாழ்வுதான் எனக்கும் ஆனந்தம்...

நான் எண்ணியது சரியாகப் போய்விட்டது. அமாவாசையன்றிரவு புங்கை மரத்தின் கீழே இருந்த வைரவர் கோவிலடியில் கனகத்துக்கும் செல்லனுக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணத்தன்று பேசிப் பார்க்கவே எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. என் கையில் இருந்த அரும்பொருள் இன்னொருவனுக்குப் போய்விட்டது .... ஆனாலும் என் கண் முன்னால் அவள் ஆனந்தமாகவே வாழ்வாள். செல்லனிடம் ஒரு தோணி இருக்கிறது. அவன் என்னைப்போலக் கடன்காரனல்ல. செல்லனோடு கனகம் என்றென்றைக்கும் ஆனந்தமாக வாழட்டும். எனக்கென்றுதோணி ஒன்று கிடையாமல் நான் எந்தப் பெண்ணின் வாழ்வையும் பாழாக்கப் போவதில்லை.........

ஆனால்,

இன்னமும் தோணி எனக்கு கனவுப் பொருளாகத்தான் இருக்கின்றது. அதனாலென்ன? உயர்ந்த கனவு செயல்மிக்க நனவின் ஆரம்பந்தான். எப்போதாவது ஒரு நாளைக்குக் காலம் மாறத்தான் போகிறது. அன்றைக்கு எனக்கு மட்டுமல்ல, என் நண்பர்கள் எல்லோருக்குமே சொந்தத் தோணி இருக்கும். எங்கள் தோணிகள் சப்த சமுத்திரங்களிலும் சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்கும். அந்த மீன்களைச் சந்தையில் பகிரங்கமாக விற்போம். விற்ற பணத்திற்குச் சந்தையில் அரிசி வாங்குவோம். அரிசி வாங்கும் பணம் என்னைப்போன்ற உழைப்பாளியான ஒருவனுக்கு நேரடியாகக் கிடைக்கும்! அப்போது உழவனுக்கு நிலமும் சொந்தமாக இருக்கும் அல்லவா?

✱


# KUMARAN BOOK CENTRE

for

**SRI LANKAN AND INDIAN MAGAZINES**
**NEWSPAPERS, CINE-PUBLICATIONS**
**AND TAMIL AUDIO CASSETTES**

also

**SRI LANKAN FOOD PRODUCTS**

'திசை' பத்திரிகையின் விற்பனையாளர்

வெளிநாட்டில் வாழும் உங்கள் உறவினர்-நண்பர்களுடன் உடனுக்குடன் FAX மூலமாக எளிதிலே தொடர்பு கொள்ள, 24 மணி நேரமும் மகிழ்ச்சியுடன் சேவை செய்யக் காத்திருக்கிறோம்,

*Kumaran Book Centre*

**1, TOWER HAMLETS ROAD, LONDON E17 4RQ**

Tel : 01-520-5960 Fax : 01-521-9482

**K. MAHESWARAN**

# இரண்டு உலகம்

-கவிஞர் அம்பி
பப்புவா நியூ கினி

எயார்நியூ கினிவிமானம்
எழும்ப விரைகிறது
என்நெஞ் சுணர்வும்
எழும்ப முயல்கிறது

எழும்ப முயன்றழுத்தும்
என்னுணர்ச்சி ஓட்டத்தை
எழுத்திற் பிடியென்று
என்னிதயஞ் சொல்கிறது

என்னிதயஞ் சொல்லியதை
ஏற்றருளி என்னுணர்வைப்
பொன்னெழுத்தில் யாத்துவிடும்
புண்ணியத்தைச் செய்திருந்தேன்

எயார்நியூ கினி எயார்பஸ்
எழும்பிப் பறக்கிறது
என்நெஞ் சழுத்தியதால்
எண்ணஞ் சுரக்கிறது

அழுத்திச் சுரந்தெழுந்த
அவ்வுணர்ச்சி ஓட்டத்தை
இழுத்துப் பிடிக்கிறது
என் கண்ணை ஈர்த்தவெழில்

என் கண்ணை ஈர்த்தவெழில்
என்மனதில் ஓவியமாய்
அன்னை இயற்கைவளம்
அப்படியே காட்டியது!

பச்சை மலைமடுவிற்
பாதையிடும் நீரோடி
நீரோடிச் செல்லயலில்
நின்றுவளர் தாவரங்கள்

தாவரம்நீ என்றுலகர்
தவமிருக்கும் பாங்குணர்ந்து
கோபுரம்போற் குன்றெழுந்து
கொலுவமர்ந்த காட்சியொன்று

கொலுவமர்ந்த குன்றழகும்
கூடிநின்ற முகிலழகும்
உலகியலின் ஓர்களமாம்
உச்சிமலைச் சாரலிலே!

உச்சிமலைச் சாரலெலாம்
உறங்குமுகிற் கூட்டவெழில்
உறங்குமுகிற் போர்வையந்தோ
உலகறியா வெண்ணிறப் பால்!

வெண்ணிறப் பால் வென்றமுகில்
விரைவில் மறைய மனக்
கண்ணெதிரே வேறுலகக்
காட்சி விரிகிறது

மண்ணில் மலையடியில்
மறைந்திருக்குந் திரவியங்கள்
மறைந்திருக்குந் திரவியத்தை
மனிதமனம் தேடிநிற்கும்.

தேடிநிற்கும் வேகத்தில்
திசைவென்றே ஓடுகிறார்
ஓடுகிறார் தேடுகிறார்
ஓய்வுறக்கம் ஏதுமின்றி
வண்ண மணியிருக்கா
வளர்தங்கப் பாறையுண்டா
எண்ணைக் குதமிருக்கா
எரிமலைதான் ஆங்குண்டா
எண்ணிஎண்ணிப்பார்க்கின்றேன்
எதுவும் விளங்கவில்லை
விண்ணில் பறந்தமனம்
விமானத்தை முந்தியது

முந்தியுந்திச் சென்றமனம்
மூச்சிழந்த வேளையிலே
சொந்த மனப்பழுவில்
சோர்ந்ததம்மா கற்பனைகள்

என்வரவை நோக்கியெந்தன்
எழிலி மகள்நிற்பாள்.
தன்னிதயம் ஆறத்
தழுவி அணைத்திடுவாள்

தழுவி அவளணைக்குத்
தமிழின் நினைவிலவள்
எழுது மடலடிகள்
என்நினைவில் நீந்தினவே

என்னருமை அப்பா
எழிலி கடிதமிது
மன்னித் தருளி
மனங்குளிர்க கண்டவுடன்

என்ன சிரிப்பப்பா
ஏளனமா ஏனப்பா
சொன்னதெல்லாம் ஞாபகந்தான்
சுகமே இருக்கின்றேன்

வாரம் ஒருகடிதம்
வரையத்தான் ஆசையப்பா
ஓரிருநாள் நான்முயன்றும்
ஒன்றும் எழுதவில்லை

ஓரிருநாள் ஓர்வாரம்
ஓடி மறைந்தின்றோ
ஈரிரண்டு திங்களென
இதயங் கணக்கிடுந்தான்

ஈரிரண்டு திங்கள்
எழுதவில்லை என்பீர்கள்
ஓரிரண்டு வினாடி
ஓய்ந்திருந்து சிந்தியுங்கள்

சிந்தித்துப் பார்த்தாற்
சிரிப்புத்தான் ஏனப்பா
விந்தைக் கதைஎதைநான்
விரிவாய் எழுதுவது

என்றாலும்
ஒன்றப்பா

பொங்கல் வருகிறது
பொன்னான நாளென்று
சங்கக்கலா மண்டபத்தில்
தமிழன்பர் கூடுகிறோம்

தமிழன்பர் கூடிவிட்டால்
சங்கடந்தான் ஏனப்பா
உளமொன்றும் பாங்கில்லா
உத்தமரா நாமப்பா

முன்வந்தோர் பின்வந்தோர்
மூப்பிளமை சொல்நிற்கும்
இன்னுந்தான் எத்தனையோ
இழுபறிகள் கொல்லநிற்கும்

என்றாலும் ஏனப்பா
ஏரம்பர் மாமியின்பின்
சென்றவரை மாமி
சிறப்பிக்குஞ் சீமாட்டி!

சீமாட்டி
சொல்லி விட்டாள்
யாம் மாட்டி
நிற் கின்றோம்.

பொங்கல்யார் பூவகையார்
போற்றுவடை மோதகம்யார்
எங்கள் பணி எல்லாம்
ஏரம்பர் மாமிசொன்னார்.

சொல்லியசொல் சொல்லென்று
சூத்திரமாய்க் கொள்பவர்நாம்
பல்லிசொல்லி நின்றாலும்
பாதை விலகோம் நாம்

பாதை விலகாமல்
பணிசெய்வோம் ஆகையினால்

ஏதோ சிலடொலரை
எறிந்துவிடல் என்பணியாம்.

நீங்கள் வருவீர்கள்
நிச்சயமாய் என்டொலரை
நாங்கள் சுவைத்திடுவோம்
நாள்எண்ணி நானிருப்பேன்.

இந்தக்கடிதம் என்
இதயத்தில் தூபமிடச்
சொந்த நினைவிலுளச்
சுமையூசல் ஆடியது

காலஞ் சுழல்கிறது
காட்சி மறைகிறது
ஞாலம் பலகோலம்
நாளும் பெறுகிறது

நாளும் பலகோலம்
ஞாலம் பெறுவதனால்
வாழும் வழிமுறைகள்
வளைந்து திரிகிறன.

வளைந்து திரிகின்ற
வாழ்க்கை முறைகளினால்
உளந்தளரும் வேளை
உலகத்தைப் பார்க்கின்றேன்

உலகத்தைப் பார்க்கையிலே
உலகம் இரண்டாகி
சலனம் அடைகின்ற
சாப்பும் தெரிகிறது.

உலக மிரண்டி லெந்தன்
உளமூசல் ஆடியது
ஊசலிட்ட உள்ளத்தில்
உண்மையலை ஓடியது

பொங்கலென்றால் என்ன
பொங்குவதேன் பொங்குவதேன்
எங்கள் தலைமுறையின்
ஏற்றம் உயிர்த்ததம்மா.

எங்கள் தலைமுறையின்
ஏற்றம் உயிர்த்துமனம்
பொங்கிச் சொரிந்து
பொலிந்து நிறைந்ததம்மா.

பொங்கிச் சொரிந்து
பொலிந்து நிறைந்தமனம்
எங்கள் பழமைகளில்
ஏணி அமைத்ததம்மா.

-வளரும்


# விம்மி

ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்

*** பாஸ்போட் * விஸா * டிக்கட்**

**மற்றும் பிரயாண ஒழுங்குகள் துரித கெதியில்**
**சிறந்த முறையில் செய்து தரப்படும்.**

**விம்மி ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்**

2, சாமி தெரு, எழும்பூர், சென்னை-600 008
போன்: 563298 & 562768

# ஈழத் தமிழர் அரசியல் : ஒரு சாட்சியம்

முன்னீடு
**சத்தியப் பிரமாணம்**

-அபிமன்யு

**முருகன்** ஆறுமுகன் சண்முகன் மகனும், ஈழத்துப் போரிலே விடுதலை வெறியுடன் தன்னையே பலிப் பொருளாக்கிய அர்ஜுனாவின் அப்பனும், அபிமன்யு என வழங்கும் கிறிஸ்தவனல்லானாகிய நான், பின் வருவனவற்றை பூரண அறிவு அவதானத்துடன், தர்மத்தின் சந்நிதானத்தில், பிரசித்தப் படுத்துகின்றேன். நான் சொல்வதெல்லாம் உண்மை; உண்மை தவிர வேறொன்றும் இல்லை.

'ஈழத் தமிழர் அரசியல்: ஒரு சாட்சியம்' என்னும் ஈழத் தமிழரின் அரசியல் வரலாற்றையும், அவ்வாறு அவர்கள் தேடிய தேட்டத்தையும், பிதுரார்ஜிதமாக்க வகை செய்யும் ஆவணத்திற்குச் சாட்சியாக நான் கையொப்பமிட்டது உண்மை. இந்த உறுதியிலே அவன் சாட்டும் அத்தனை அநுபவ சொத்துக்களும் அவன் சுயதேட்டமாகும். சீதன பாதனமாக அவன் எதையும் பெறவில்லை. வருங்காலம் என்கிற அறிவார்ந்த மகா சந்நிதானத்திலாவது உண்மைகள் நிலைநாட்டப்படுதல் வேண்டும் என்கிற ஓர்மையும் இந்தச் சாட்சியத்தின் விழைவுக்கு ஏதுவாகும். இந்தச் சாட்சியத்தினை, சுய ஆதாயங்கள் ஏதும் நத்தாமல், நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமல், சுயாதீன இச்சையுடன், பூரண சித்த சுவாதீனத்துடன், அளித்தான் என்பதும் உண்மை.

அவன் தன்னுடைய சாட்சியத்திற்கு ஆதாரமாக பின்வருவனவற்றையும் பிரசித்தமாக்கினான்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா, இந்நாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, இலங்கைப் பாராளுமன்றத்திலே காலத்திற்குக் காலம் அமைச்சர்களாகத் திகழ்ந்த சு. நடேசபிள்ளை, வி. நல்லையா, மு. திருச்செல்வம், சௌ. தொண்டமான், குமாரசூரியர், கே. டபிள்யு. தேவநாயகம், செ. இராஜதுரை, அல்ஹாஜ பதியுத்தீன் மஹ்மூத், கேட் முதலியார் காரியப்பர், ஜனாப் எம்.எம். முஸ்தபா, பீட்டர் கெனமன், டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா, வின்சன்ட் பெரேரா, ஆர்.எஸ். பெரேரா, ஹுருல்ல, ரி.பி. இலங்கரத்னா, ஸ்டான்லி திலகரத்னா, காமினி திஸநாயக்கா ஆகியோருடன் அவன் ஒரே மேடையைப் பகிர்ந்து, தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலே கருத்துத் தெரிவித்திருக்கிறான் என்பதும் உண்மை.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம், தமிழரசுக் கட்சி ஸ்தாபகர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், தமிழரசுக் கட்சித் தலைவர்களாக விளங்கிய வன்னியசிங்கம், இராஜமாணிக்கம், இராஜவரோதயர், இளைஞர் காங்கிரஸ் பிரமுகர் ஹண்டி பேரின்பநாயகம், அடங்காத் தமிழர் முன்னணித் தலைவர் சி. சுந்தரலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் செல்லச்சாமி, ஜனநாயக காங்கிரஸ் செயலாளர் கணேசன், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் விக்ரமசிங்கா, கம்யூனிஸ்ட் கட்சி (சீனச் சார்பு) தலைவர் நா. சண்முகதாஸன், கிழக்கிலங்கைத் தமிழர் முன்னணித் தலைவர் புலவர்மணி, ஏ. பெரியதம்பிப்பிள்ளை, இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம்.ஸி. சுப்பிரமணியம், லங்கா பிரஜா தந்திர கட்சித் தலைவர் டபிள்யூ. தஹநாயக்கா, செந்தமிழர் இயக்கம் துவங்கித் தனது அரசியல் வாழ்வுக்கு மங்களம் பாடிய வி. பொன்னம்பலம், இலங்கை எழுது வினைஞர் சங்கத் தலைவர்களாக விளங்கிய நித்தியானந்தன், வைகுந்தவாசன், இலங்கை சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா ஆகியோருடன் அவன் பல்வேறு சந்தர்ப்பங்களிலே சமுதாய-அரசியற் கலந்துறவுகள் வைத்திருக்கின்றான் என்பதும் உண்மை.

இலங்கைப் பாராளுமன்றத்திலே காலத்துக் காலம் பிரதி அமைச்சர்களாக விளங்கிய சாவகச்சேரி குமாரசுவாமி, பட்டிருப்பு எதிர்மன்னசிங்கம், சம்மாந்துறை மஜீத், மூதூர் முஹம்மது அலி, மூதூர் மஜீத், மூதூர் மஹரூப், ஏறாவூர் பரீத் மீராலெப்பை, பொத்துவில் கனகரத்தினம் ஆகியோருடனும், அக்காலத்தில் சேனட் சபை உறுப்பினர்களாகத் திகழ்ந்த எஸ். நடேசன், அல்ஹாஜ ஏ.எம்.ஏ. அஸீஸ், ஈ.எம்.வி. நாகநாதன், முதலியார் ராஜேந்திரம், ஜி.நல்லையா, எம்.மாணிக்கம், மஷ்ஹூர் மௌலானா, இலங்கைப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக விளங்கிய-விளங்கும் பொன். கந்தையா, துரைரத்தி

னம், கே.பி. ரத்தினம், யோகேஸ்வரன், ஆலாலசுந்தரம், தங்கத்துரை, மாணிக்கவாசகர், கதிர்காமர், தம்பிராஜா, சாம். தம்பிமுத்து, பிறின்ஸ் காசிநாதர், சௌந்தரராஜன், அஹமத், லத்திப் சின்னலெப்பை, றிஸ்வி சின்னலெப்பை, நிந்தவூர் மஜீத் ஆகியோருடன் தோழமை பாராட்டிப் பழகியுமிருக்கின்றான்.

அரசியல் அபிலாஷைகளுடன் செயற்பட்ட சந்திரஹாஸன், குமார் பொன்னம்பலம், ஈழவேந்தன், ஈ. சங்கர் கோவை மகேசன், மாவை சேனாதிராஜா, தி.மு.க. அரசியலுக்கு இலங்கையில் கொடி பிடித்த மணவைத்தம்பி, அ.தி.மு.க.வுக்கு இலங்கைக் கிளை துவங்கிய நயினார், நாம் தமிழர் இயக்கத்தின் சி. பா. ஆதித்தனாருக்குக் கொடி பிடித்ததிலிருந்து இன்றளவும் பலருக்கும் கொடிதாங்கும் கா.சி. ஆனந்தன் ஆகியோருடைய தவ்வல் முயற்சிகளுக்கும், முயற்சிப் பங்கங்களுக்கும் அவன் சாட்சியாகவும் அமர்ந்திருக்கின்றான்.

ஈழத்தின் தமிழ்ப் பத்திரிகையாளர்களாகத் திகழ்ந்த ஈழகேசரி பொன்னையா, கே.பி. ஹரன், கே.வி.எஸ். வாஸ், லோகநாதன், கே. இராமநாதன், தினகரன்நாதன், எஸ்.டி. சிவநாயகம், ராஜ. அரியரத்தினம், கைலாசபதி, சிவகுருநாதன், சிவப்பிரகாசம், பொ. கிருஷ்ணசாமி, ஏ.ஜே. கனகரத்னா, கே. கணேஷ், டேவிட் ராஜு, கார்மேகம், சிவநேசச்செல்வன், ராஜகோபால், எச்.எம்.பி. முஹிதீன், இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான், ரத்தினகோபால், திருச்செல்வம் ஆகியோருடனும், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜனசக்தி ப. ஜீவானந்தம், தென்றல் கண்ணதாசன், கலைமகள் கி.வா. ஜகந்நாதன், பிரசண்ட விகடன் நாரண துரைக்கண்ணன், கல்கி ராஜேந்திரன், ராணி அ. மா. சாமி, சரஸ்வதி வ. விஜயபாஸ்கரன், எழுத்து சி.சு. செல்லப்பா, தீபம் பார்த்தசாரதி, முகவை ராஜமாணிக்கம், சோ, சிவபாதசுந்தரம், சாலை இளந்திரையன், கிருஷ்ணமூர்த்தி ஆகிய தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்களுடனும் நட்புப் பாராட்டிப் பழகியதுடன், அவர்களிலே பலர் வழங்கிய பிரசுர களங்களைத் தனது கருத்துக்களைப் பகிரங்கப் படுத்துவதற்கு அவன் பயன்படுத்தியுமிருக்கின்றான்.

போராட்ட இயக்கங்களுக்கு ஆலோசகர்களாக விளங்கும் 'ஈரோஸ்' இரத்தினசபாபதி, 'புலிகள்' அன்டன் பாலசிங்கம் ஆகியோருடன் அடிநாளைய கலந்துறவு கொண்டிருக்கின்றான். அவன் போராட்ட இயக்கங்களின் பிரதிநிதிகளுடன் லண்டனிலும், பாரீஸிலும், சென்னையிலும் ஈழத் தமிழருடைய போராட்ட இலக்குகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் இருக்கின்றான்.

நேருவின் மகள் வயிற்றுப் பேரனும், காந்திப் பெயரினனுமாகிய ராஜீவ் இந்தியப் பிரதமராக அமர்ந்து, ஈழத் தமிழர்களுடைய அரசியல் அபிலாஷைகளை நசுக்குவதற்கு இந்திய ராணுவத்தை ஈழ மண்ணிலே கட்டவிழ்த்துவிட்டதைக் கண்டித்துப் பகிரங்கக் கடிதம் எழுதிச் சந்நதமும் ஆடியிருக்கின்றான்.

அவனுடைய அரசியல் அநுபவங்கள் பரந்துபட்டவை. அரை நூற்றாண்டு நிகழ்ச்சிகளை உள்ளடக்கியவை.

இத்தனை அரசியல் தொடர்புகளினால் தேடிக்கொண்ட அநுபவங்களின் முதிர்ச்சி தோற்றி, அவனுக்கு இந்தச் சாட்சியம் அளிப்பதற்கு மட்டுமல்லாமல், உரியதொரு அரசியல் சாஸனம் தயாரிப்பதற்கும் தகுதியும் உரிமையும் உண்டு என்பதை நான் சத்தியமாகவே நம்புகின்றேன்.

இத்தனைக்கும் சுமார் இரண்டாண்டு காலம் அவன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவனாய் இருந்தது தவிர, வேறு எந்த அரசியல் கட்சியிலும் இயக்கங்களிலும் உத்தியோகப் பற்றுடைய அங்கத்தவனாய் இருந்ததில்லை. மனம் - வாக்கு - காயங்களினால் ஒரு நல்ல கம்யூனிஸ்ட் எப்படி வாழுதல் வேண்டும் என்பதன் உயர்ந்த திருட்டாந்தமாயும், யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது செயலாளராகவும் விளங்கிய மு. கார்த்திகேசனின் அரசியல் போதனைகளினாலும், சோஷலிஸ இலக்கியப் பார்வைக்கும் பிரசாரத்திற்கும் ஒரு முன்னோடியாக விளங்கிய ப. ஜீவானந்தத்தின் ஆன்மீக செல்வாக்கினாலும், இறக்கும் வரை ஒப்பற்ற சமூகத் தொண்டனாயும் மனிதநேயமுடைய தொழிற்சங்கவாதியாகவும் திகழ்ந்த கே.வி. கிருஷ்ணக்குட்டியின் செறிந்த நட்பினாலும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழியனாய்ப் பணியாற்றிய காலந் தவிர்ந்த ஏனைய காலம் எல்லாம் அவன் ஈழத்துத் தமிழ் அரசியல் நிகழ்வுகளின் அக்கறையுள்ள மாணாக்கனாயும் சத்திய சாட்சியாகவும் விளங்கினான் என்பதையும் இத்தால் கெட்டியாக உறுதிப் படுத்துகின்றேன்.

இவை உண்மை. உண்மை தவிர வேறொன்றுமில்லை.

**-அபிமன்யு**

ஒன்று

## மூத்த தலைவர் மூவர்

ஈழத் தமிழரின் அரசியல் தேட்டத்திற்கு **அவன்** ஒரு சாட்சியாய் நிறுத்தப்படுகின்றான்.

அவனுடைய அரசியற் பிரக்ஞை யாழ்ப்பாணத்திலே

உருவாகியதுதான். யாழ்ப்பாணத்திற்கு என்றுமே ஒரு பெருமையுண்டு. யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஈழத் தமிழரின் ஆன்மீக கலாசாரத் தலைநகராக யாழ்ப்பாணமே திகழ்கின்றது, பிற்காலத்திலே, கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளிலே 'யாழ் அகத்தி'ச் சங்கங்கள் நடத்தி 'மண்ணின் மைந்தர்'களுடைய வாக்குகளைப் 'பிடிப்'பதிலே ஈடுபட்டிருந்த அரசியல்வாதிகள் அனைவருடைய பூர்வீகமும் யாழ்மண்ணுடன் இணைந்திருந்தது. இதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஒன்றைப் போற்றுவதும், உடனடி ஆதாயங்களுக்குப் பயன்படாவிட்டால் அதனையே தூற்றுவதும், இந்த மண் மாண்பின் சில ஸ்திதிகளே. முரண்பாடுகள் அனைத்தையும் வைத்து இணக்கங் கண்டு வாழ்க்கையை ஓட்டுவது அருங்கலையாகும். இந்தக் கலையும் யாழ்ப்பாண மண்ணுக்கு வாரியானது.

அவனுடைய காலத்து யாழ்ப்பாணம் பழையது. அந்தக் காலத்து யாழ்ப்பாணத்தினுடைய **land-marks** இன்றைய தலைமுறையினருக்குப் புரியாத கோலங்களே! கன்கிறீட் காடுகளும், காரோடும் தார் வீதிகளும் நேற்றைய பொருள் வளத்தினால் தோன்றியவை. சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்ட அந்தக் காலத்திலே, யாழ்ப்பாணப்பட்டினம் பல கிராமங்களின் தொகுதியாகவே திகழ்ந்தது. ஒவ்வொரு பகுதியும் (ஒவ்வொரு தனிக் கிராமத்தின் சாங்கத்துடன்) மேட்டுக் குடிகளுடைய ஓட்டு வீடுகள் சிலவற்றுடனும், ஓலை போர்த்திய வீடுகள் பலவற்றுடனும் திகழ்ந்தது. 'சுத்து மதில்'கள் மிகவும் ஒறுப்பு. 'இரும்புத் திரை' பற்றியும் 'மூங்கில் திரை' பற்றியும் மேனாட்டுப் புத்தி ஜீவிகள் சிந்தித்துப் பிரஸ்தாபிப்பதற்கு முன்னரே, 'திரை'களின் அவசியத்தை யாழ்ப்பாணம் உணர்ந்திருந்தமையும் அம்மண்வாழ் மக்களின் சில போக்குகளை இனங் காணுவதற்கு உதவும். கிடுகு வேலிகளும், காவோலை அடைப்புகளும் யாழ்ப்பாண வீடுகளை மறைத்துக் காவல் செய்தன. சிறுமைகளை-மன அவலங்களை-ஏக்கப் பெருமூச்சுகளை-ஒழுக்கப் பிறழ்வுகளை-சங்கைக் கேடுகளை-மான நட்டங்களை-இயலாமைகளை - சடைத்த அயோக்கியத் தனங்களை எல்லாம் இந்த ஓலை வேலிகள் மறைத்துவிடும் என்று யாழ்ப்பாணம் மெய்யாகவே நம்பியது. இந்த வேலிகளைக் கோட்டை அரண்களாகக் கற்பித்துக் கொண்டாடியதினாலும், கோட்டை வாயில்களை உருவகப்படுத்தி, புறவாயில்களுக்கு மாட்டுத் தொழுவம் கணியம் கொட்டில்கள் கட்டிச் 'சங்கடப் படலை'களும் நிறுவிக் கொண்டார்கள் போலும்! ஒவ்வொரு பகுதியையும் குளங்களும் கலட்டிகளும் மட்டுமல்லாமல், தென்னந் தோப்புகளும், பனங்காடுகளும் குறுக்கிட்டுப் பிரித்து வைத்தன.

இந்த எல்லைகளை மருவி நின்ற தாவர இயல்புகள் இன்றைய தலைமுறையைச் சேர்ந்த யாழ்ப்பாண வாசிகளின் கற்பனைக்கும் சிக்குப்பட இயலாத தன்மைத்தனமாக இருந்தன. பங்காளிப் பகை வளர்த்த புளியங்கூடல்கள். வெளவால்களின் சரணாலயமாக விளங்கிய இலுப்பைத் தோப்புகள். முருகனும் ஒளவைப் பிராட்டியும் 'கால் வீட்' கொடுக்காத முறையைப் பாராட்டாத நாவற்காடுகள். வேப்ப மரங்களுக்கும் குறைவில்லை. வைரவர் சூலம் நாட்டப்பட்ட மரங்களிலே 'வைரவர்'களும், ஏனையவற்றிலே 'அம்மாளாச்சி'களும் குடியேறி வாழ்ந்தார்கள். ஆதனப் பிணக்குகளை மக்கள் கோட்டடி வழக்குகளாலும், முடியாவிட்டால் கொலைகளாலும் தீர்த்துக் கொண்டதினால், 'சிறு தெய்வங்கள்' ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். யாழ்ப்பாணத்து மாடுகளினதும் ஆடுகளினதும் மடிகளிலே பால் சுரக்க வேண்டும் என்பதற்காக, ஆல மரங்களும் அரச மரங்களும் அவற்றின் நஞ்சுக் கொடிகளை தனித் தனி உமல்களிலே பொதிகளாகத் தாங்கிக் கொண்டன. அவற்றிலிருந்து கிளர்ந்தெழும் நாற்றங்களினாற் கிளர்ச்சி அடைந்த 'முனிகள்' அந்த மரங்களிலே குடியேறி வாழ்ந்தன. 'சூன்யக்காரர்'களும் வயிற்றுப் பிழைப்பு நடத்த வேண்டும் என்கிற பரோபகாரத்தில், மரங்களின் வகை பேதத்

## லா. ச. ரா. கருத்துக்கள்

**எண்ணம்தான் முக்யம். செயல் இல்லை என்றே சொல்வேன். காசிக்குப் போவதாகக் கிளம்பி வைத்த ஆறு அடிகளுள் காசிக்குப் போன பலன் கிடைத்துவிட்டதாக எங்கள் வழக்கு ஒன்று உண்டு.** □

**என்னைப் பார், என் அழகைப் பார் என்று தன் முகம் காட்டாது, கையால் மட்டும் விளித்து உயிரையே குடிக்கும் அழகியே! நீ வேசியோ?** □

**ஆட்டுக் குட்டிக்காக அழுது, உலகத்துக்காகவே அழுது விட்டீர்கள். நீங்கள் பாக்யவான்.** □

**நீங்கள் என்னைத் தேடி வந்ததாக நினைத்துக் கொண்டு உங்களைத்தான் தேடி வந்திருக்கிறீர்கள். உங்களை நீங்கள் அடைவீர்களாக!** □

**உங்கள் பொறியைக் காப்பாற்றுங்கள்.** □

17-1-1991

தினைப் பாராட்டாது 'பேய்கள்' பல மரங்களை வாடகைக்கு அமர்த்திக் கொண்டன. இலந்தை மரங்கள், அன்னமுன்னாப் புதர்கள், எருக்கம் பற்றைகள் ஆகியன மட்டுமன்றி, சித்த வைத்தியர்களின் 'யாவாரம்' படுத்துவிடக்கூடாது என்பதற்காக இக்கிரி-நாயுருவி-பாவட்டை முதலிய முகிலிவகைத் தாவரங்களும் தாராளமாக வளர்ந்தன.

அந்தக் கால யாழ்ப்பாணக் குடா நாட்டிலே புகழ் பூத்த ஆங்கிலப் பாடசாலைகள் சிலவும், சுய பாஷைப் பாடசாலைகள் பலவும் கல்விப் பணி ஆற்றின. 'யாழ்ப்பாணத்தின் முக்கியமான தொழிற்சாலைகள் கல்விக் கூடங்களே' என்று சேர் பொன். இராமநாதன் ஆங்கிலேயத் தேசாதிபதிக்கும் 'பீற்றி'க் கொள்ளும் அளவுக்கு அவை செயற்பட்டன என்பது உண்மை. ஆங்கிலக் கல்விச் சேவை றோமன் கத்தோலிக்கருடைய ஏக போகமாகவும் இருக்கவில்லை. அச்சுயந்திர வசதியுடன் இலங்கைக் கரைக்கு வந்திறங்கிய அமெரிக்க மிஷனரிமாரை ஆங்கிலேய துரைத்தனம் சந்தேகக் கண்களுடன் பார்த்ததினால், தென்னிலங்கையிலே தண்டிறக்க விடாது, வரண்ட மணற்றிட்டிக்குப் பிரஷ்டம் செய்தது. இதனாலும் மலைவளம் குன்றிய யாழ்ப்பாணக் குடாநாடு கல்வி வளர்ச்சியிலே ஆதாயம் பெற்றது. 'பஞ்சாட்சர காத'லினால் (ச-ம்-ப-ள-ம் என்கிற ஐந்து எழுத்துச் சொல்மீது கொண்ட காமம்) மக்கள் மதம் மாறி யாழ்ப்பாணக் கலாசாரத்தை 'அசௌசம்' செய்கிறார்கள் என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அபயக்குரல் எழுப்பினார்! அந்த நாவலரின் ஆதரவினை அரசியல்வாதியான இராமநாதன் நாடியதும் உண்டு. எனவே, இந்துக்களின் பரிபாலனத்திற்குட்பட்ட பாடசாலைகளும் போட்டி போட்டுக்கொண்டு முளைத்தன. யாழ்ப்பாணத்திலே பரம்பிய கிறிஸ்தவங்கூட யாழ்ப்பாணத்திலே சடைத்திருந்த சாதிவெறி ஆசாரங்களுக்குத் தலைவணங்கி, 'நோவினை' 'தனி வாங்குகள்' முதலிய புனுகுகள் தடவிக் காப்பாற்றியது என்பதை, 'கரையார் கரைவது ஏனோ...பறையருள்ளும் இவ்வாறு ஒரு வித்துவகேசரி தோன்றிப் பறையாரே? பறையினும் பறைவர்' போன்ற வசனங்களை ஆக்குவதிலே சிந்தை குவித்த நாவலர் வாதத்தின் வசதிக்காக மறந்து போனார். என்ன இருப்பினும், **C. W. W.** கன்னங்கராவின் 'புண்ணிய'த்தினால் 'இலவசக் கல்வி' முறை புகுத்தப்படும் வரையிலும், ஆங்கிலக் கல்வியின் வளம் மேட்டுக் குடியினர் மாட்டே பொசியலாயிற்று. இதில் வேடிக்கை என்னவென்றால், நாவலர் பிரசாரங்களுக்கு முற்றாக மசியாமல், கல்விக் கேள்மை சமம் ஆங்கில அறிவு என்பதை யாழ்ப்பாணம் ஏற்றுக் கொண்டது. 'கோழி மேய்க்கும் உத்தியோகம் என்றாலும் கொர்ணமேந்து உத்தியோகமே சிறந்தது' என்பதையும் திரிகரணசுத்தியாக அங்கீகரித்தது.

ஆங்கிலம் எட்டாம் வகுப்பு (ஜே.எஸ்.ஸி) சித்தியடைந்தவர்களுக்கே 'கையோடு கம்மாரிஸ்' என்ற நிலையில் 'பாலப் பருப்பு'ப் போல நல்ல 'உத்தியோகங்கள்' கிடைத்தன. மெட்றிகுலேஷன் அல்லது எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவர்க்கு 'சுவர் சொட்டாக'க் குறைந்தது 'கிளறிக்கல்' வேலையாவது காத்திருந்தது. இண்டர்மீரியட் சித்தியடைந்தால் மணியகாரன் (தற்போதைய உதவி அரசாங்க அதிபர் பதவி) வேலை பார்க்கலாம். பட்டதாரிகளுடைய மதிப்பினைக் கல்யாணத் தரகர்களாலேயே மடக்க முடியாது இருந்தது என்றால், நம்மால் மட்டிடுதல் சாலுமோ? இந்நிலையில், ஆங்கிலப் பாடசாலைகளிலே கல்வி புகட்டுவதற்கு திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்தும், சென்னை ராஜதானியிலிருந்தும்பட்டதாரிகளை 'இறக்குமதி' (இவ்வாறு இறக்குமதிசெய்யப்பட்டவரே இரண்டாவது பாராளுமன்றத்தில் அமைச்சராய்விளங்கிய சு. நடேசபிள்ளை என்கிற மான்மியம் பின்னால் வரும்) செய்யும் அவலம் யாழ்பாணத்துக்கு இருந்தது. தென்னிலங்கையிலே காலியாக வந்த அரசாங்க உத்தியோகங்கள் பலவற்றையும் 'படித்த' ஈழத்தமிழர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். 'மோட்டுச் சிங்களவனுக்குச் சுட்டுப் போட்டாலும் கணக்கு வராது' என்று பேசுவதிலே தமிழன் இன்பங்கண்டான். உத்தியோகம் பார்த்த பகுதிகளிலே மேட்டுக்குடித் தமிழர்கள் மலிவாக 'போய்' **(BOY)** என்ற வேலைக்காரர்களையும், 'ஆயா' என்ற வேலைக்காரிகளையும் 'பிடி'த்து இழுத்து வந்து யாழ்ப்பாண வாழ்க்கைக்குக் 'கலாதி' சேர்த்தார்கள் 'ஆயா'க்களாக வந்த சிங்களத்திகள் பலர் 'தமிழர் ஆண்மை'யைத் தங்களுடைய கர்ப்பப் பைகளிலே சுமக்கவும் நேர்ந்தது. இந்தக் காமக் களியாட்ட அறுவடைகளும், வெட்கக் கேடுகளும் யாழ்ப்பாணத் தர்மாஸ்பத்திரிக்கும் பெரிய கடைக்கும் இடையில் புறம்போக்கு போன்றமைந்திருந்த மரவள்ளித் தோட்டத்திலே (இங்குதான் இன்று யாழ்ப்பாண மருத்துவ போதனா பீட ஆஸ்பத்திரியின் பிரதான நிர்வாக கட்டடங்கள் அமைந்துள்ளன) நச்சுக் கொடிகளுடன் புதைக்கப்பட்டதினால், நல்ல விலைக்குப் போகக்கூடிய 'நாம்ப்' னுகளாக வளர்ந்த 'இளந்தாரி' களுடைய ஒழுக்காசாரம் இவ்வாறு பேணப்பட்டதாக யாழ்ப்பாணம் மெய்யாகவே நம்பியது,

-வளரும்

# நமது கலாசாரம் பேணுதும்!

**தை** விடியலில் பொங்கல், அதனைக் கோலாகலமாகக் கொண்டாடுதல் தமிழர் மரபு. 'ஞாயிறு போற்றுதும்!...மாமழை போற்றுதும்!' என்று தமிழ்க் காவியந் துவங்கினார் இளங் கோவடிகள். சூரியனுக்கும் மழைக்கும் **Thanks giving** நாளாக, உழவர் பெருநாளாகப் பொங்கலைக் கொண்டாடுதல் மரபு. உழவுப் பணியில் உதவும் மாடுகளுக்கு நன்றி தெரிவிக்க அடுத்த தினம் மாட்டுப் பொங்கல். நன்றி மறவாமை ஓர் இனிய மனிதப் பண்பாகும்.

பொங்கல் தமிழர் கலாசாரப் பெருநாள். அது சைவத் திருநாளல்ல. ஒரு காலத்தில் வாண வேடிக்கைகளும், பட்டாசுகள் வெடித்தலும் பொங்கற் பண்டிகையிலே சிறப்பிடம் பெற்றது. தானியம் தொடக்கம் அடுப்புவரை எல்லாம் புதிது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதும் பொங்கற் கலாசாரத்தை அடியொற்றி எழுந்ததே.

சூரியன் எரிக்கும் முற்றத்தில் மூவர்ண (வெள்ளை-சிகப்பு-மஞ்சள்) கோலமிட்டு, இஞ்சி-மஞ்சள் செடிகளை முறுக்கிய கொடியில் மாவிலைத் தோரணம் செய்து புதுப் பானைக் கழுத்திலே கட்டி, புது அடுப்பு நட்டு, பாளை விறகிட்டு, பட்டாசு வெடித்து மரபு ரீதியான பொங்கலைப் புலம் பெயர்ந்த நாடுகளிலே கொண்டாட இயலாது. வாஸ்தவம். இருப்பினும், பொங்கற் பண்டிகையின் மரபுகளையும் ஆசாரங்களையும் நம் இளைய சந்ததியாரும் அறிந்து போற்றும் வகையில், நமது மனைகள் தோறும் பொங்கலைக் கொண்டாடுதல் தக்கது. இவ்வாறு புலம் பெயர்ந்த தமிழர் பலரும் கொண்டாடி வருதல் உவகைக்குரியது.

அதே சமயம், சில நாடுகளிலே, 'பொங்கலை வீட்டிலே கொண்டாடத் தேவை யில்லை. அதனை நாங்கள் சாய்பாபா நிலையத்திலே கொண்டாடுவதுதான் சிறந்தது' என்று கலாசாரப் பிறழ்வை ஏற்படுத்துகிறார்கள். அறியாமையோ? தலைமைத்துவ அவதிகளோ? யார் அறிவர்?

எம்மதமும் நமக்குச் சம்மதமே. பொருள் முதல்வாதிகளையும் அநுசரிக்கும் பண்பு நமக்கு உண்டு. ஒன்று மேலென்றும், பிறிதொன்று தாழ்வென்றும் வக்கிரம் பேசுவதில் நமக்கு உடன்பாடில்லை. பகவான் சத்திய சாய் பாபா சகல மத சௌஜன்யத்தைப் பெரிதும் பேணுபவர், சிவராத்திரிக்கும் நத்தாருக்கும் சம முக்கியத்துவம் அளிப்பவர். தெலுங்கு மொழி பேசுவதில் பெருமைப்படுபவர். அதற்காக ஆந்திர கலாசாரத்தினைத் தமது ஊழியத்திலே புகுத்தாதவர். புலம்பெயர்ந்துள்ள தமிழ்ச் சிறார்களின் உள்ளங்களிலே ஈழத் தேயத்தின் ஆன்மீக விழுமியங்களை வளர்ப்பதில் சாய் நிலையங்களின் தொண்டு பாரியது. இவற்றை வாய் மணக்கப் பாராட்டுவோம்.

ஆனால், சாய் பாபா ஊழியம் சமன் தமிழ்க் கலாசாரம் என்கிற எண்ணத்தினைச் சிறார்களின் உள்ளங்களிலே ஊன்றுவதின் மூலம், அவர்கள் தமிழ்க் கலாசாரம் பற்றிய தவறான கருத்துக்களைப் பரப்புவதுடன், பகவானின் ஊழியத்தையும் கொச்சைப்படுத்து கிறார்கள். 'வாழ்க்கை என்பது அன்பு, அதனைப் பங்கிடுங்கள்' என்று சாய் பாபா போதிக் கின்றார். 'வாழ்க்கை என்பது லோகாயுத உலகத்தின் வசதிகள் கருதி, ஆன்மிகப் போக்கிலே இணக்கங் காணுங்கள்' என்று அவர் ஒரு நாளும் போதிக்கவில்லை. இந்த உண்மையை உணர்ந்து, இனியாவது பொங்கல் என்ற தமிழ்க் கலாசார நிகழ்ச்சி உரிய முறையிலே, ஈழத் தமிழர் இல்லங்கள் தோறும் பாலும், பழமும், பச்சை அரிசியும் மணங்கமழும் வகையிலே கொண்டாடப்படுவதற்கு ஊக்கமளிக்க முன்வருவார்களாக! கலாசார மரபுகள் வேறு; மதாசார மரபுகள் வேறு என்கிற ஞானம் ஏற்படுவதை நாம் மனசார வரவேற்கின்றோம்.




### மெல்லிசை

சென்னைத் தொலைக் காட்சி வழங்கும் 'நிழலோவியம்' என்ற நிகழ்ச்சி மூலம் இசைய மைப்பாளராக அறிமுகமாகி... இன்று தமிழக மெல்லிசை மேடைகளில் பிரபலம் பெற்றுத் திகழும் திரு. நீதிதேவன் யாழ்ப் பாணம் வேலணையைப் பிறப் பிடமாகக் கொண்டவர்.

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியில் விளைந்த இந்த 'இசைமுத்துக்கு வயது இருபத்தி ஐந்துதான். 1984-ல் தமிழகத்துக்கு புலம் பெயர்ந்த இவர் 'ராகதரங்கிணி' என்ற இசைக் குழுவைத் தொடங்கி இதுவரை 100 -க்கு மேற்பட்ட மெல்லிசை நிகழ்ச்சிகளை இங்கே வழங்கி இருக்கிறார்.

'தமிழ்நாடு சினிமாக்கலை மன்றம்' என்ற அமைப்பு இவ ரது இசைக் குழுவை 1988இன் சிறந்த இசைக்குழுவாக தேர்ந் தெடுத்ததையும் அதற்கான விரு தை பிரபல திரைப்பட இசைய மைப்பாளர் சந்திரபோஸ் கை யால் பெற்றதையும் - 'ராகதரங் கிணி' இசைக்குழுவின் ஆண்டு நிறைவு விழாவுக்கு இளைய ராஜாவின் சகோதரர் கங்கை அமரன் சிறப்பு விருந்தினராக வந்து வாழ்த்தியதோடு நீதிதே வன் இசையமைப்பில் இரண்டு பாடல்கள் பாடிச்சென்றதையும் தன் இசைவாழ்வின் பாக்கியங் கள் என்கிறார் நீதிதேவன்.

நயினை நாகபூஷணி அம் வன், நல்லூர்க் கந்தன், கதிர் காமக் கந்தன், போன்ற ஈழத்து தெய்வீகங்களை இசை வயப் படுத்தி அதை ஜேசுதாஸ், சீர் காழி சிவ சிதம்பரம் போன்றவர் களின் குயிலினிமையில் கேசட்டுக் களாக வெளியிடத் தீர்மானித் திருக்கிறார் நீதிதேவன். இந்த முயற்சி வெற்றியளிக்கும் பட்சத் தில் ஈழத்து நாட்டுப்புறப் பாடல்களை புதுமையான முறையில் இசை யமைத்து ஈழத்து - தமிழக பாடகர்களை இணைந்து பாட வைத்து கேசட் டுக்களாக வெளியிடவும் தீர்மா னித்திருப்பதாக சமீபத்தில் நீதி தேவன் என்னிடம் சொன்னார்.

### சினிமா

ஈழத்தமிழர் மீதான அனு தாப அலையும், உணர்வுப் புய லும் தமிழகத்தையே பொங்க வைத்த எரிமலையுகத்திலும் சரி அந்த உணர்வு அலைகள் மௌ னமாகஉறங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்திலும் சரி ஈழத்தமிழர்பால் கொண்டிருக் கும் மரியாதையை மாற்றிக் கொள்ளாத ஒரு நடிகராகத் திகழ்பவர் விஜயகாந்த்.

நடிகர்களில் பலர் தங்க ளின் பிறந்த நாளை ஐந்து நட் சத்திர ஹோட்டல்களிலும், ஆடம்பர விழாக்களிலும், ஆளு யரப் போஸ்டர்களிலும் விளம் பரப் படுத்திக் கொள்ளும் இன் றைய காலகட்டத்தில் விஜய காந்த் மட்டும் தனது பிறந்த தினத்தில் ஒரு மாறுபட்ட மனி தனாக தன்னை இனம் காட்டு கிறார். எப்போதுமே ! சமீபத் தில் ராமேஸ்வரத்தில் உள்ள ஈழத்து அகதி முகாம்களுக்குச் சென்று அங்குள்ளவர்களுக்கு அடிப்படை உதவிகளைச் செய்து அவர்களோடு ஒன்றாக உட் கார்ந்து உணவருந்தி தனது பிறந்த நாளைக் கொண்டாடி னார் விஜயகாந்த்,

நடிகர் விஜயகாந்த் 'விடுத லைப்புலித்தலைவர் பிரபாகர னின் ரசிகர்' என்று வர்ணிக் கிறது ஒரு அகில இந்தியப் பத்தி ரிகை.

உண்மைதான். பிரபாகரன் மீது அளவு கடந்த பிரியம் வைத்திருப்பவர் விஜயகாந்த். பிரபாகரன் மீது தான் கொண்டி ருக்கும் பாசத்தை வெளிப்படுத் துவதற்காக சமீபத்தில் பிறந்த தனது மூத்த புதல்வனுக்கு பிர பாகரன் என்றே பெயர் வைத் திருக்கிறார். தனது 100 ஆவது படத்தில் தன் கேரக்டரின் பெயர் பிரபாகரன் என்று வரு மாறு பார்த்துக் கொண்ட விஜி அந்தப் படத்துக்கும் 'கேப்டன் பிரபாகரன்' என்றே பெயர் வைத்திருக்கிறார். 'இனவுணர்வு' என்பது சீதோஷ்ணத்துக்கு ஏற்ப மாறுவதல்ல என்பதற்கு முன்னுதாரணமாகத் திகழும் விஜயகாந்த் முதலில் தன்னைத் 'தமிழன்' என்றே நினைத்துக் கொள்கிறார். அப்புறம்தான் நடிகன், புகழ், பூமாலை எல் லாம்.

★

ஒரு வாறாக சென்னையில் 'சர்வதேச திரைப்பட விழா' நடந்து முடிந்துவிட்டது.

சென்னைப் பல்கலைக் கழக ஆடிட்டோரியத்திலும் நக ரத்தின் உயர்தர திரையரங்கு கள் பலவற்றிலும் திருவிழாக் கோலம்!

பிலிம் பெஸ்டிவலின் ஆரம்ப நாள் நிகழ்ச்சிகளை சென்னைத் தொலைக்காட்சி நிலையம் நேர டியாக ஒளி பரப்பியது.

தமிழ்த்திரையில் சகாப்தம் படைத்த... படைத்துக்கொண்

**- யாழ் சுதாகர் -**

டிருக்கிற எவருமே அந்த விழாவுக்கு அழைக்கப்படவில்லை என்பது நெருடலான விஷயம்.

விழாமேடையில்; இந்தியிலிருந்து வந்த ஹேமமாலினிக்கும், பல்லவிக்கும், ரூபினிக்கும், கொடுத்த முக்கியத்துவத்தை பக்குவமனதுடன் பாராட்டலாம். ஆனால் வ.உ.சி ஆகவும் கட்டபொம்மனாகவும் திரைத்தமிழுக்குத் திலகமிட்ட சிவாஜியையும் தமிழகத்தின் கிராமிய வனப்பை ... மண்வாசனையை 'திரைக்கவிதை'யாக எழுதிய பாரதிராஜாவையும் இசையால் அகில இந்திய அளவில் தமிழனுக்குப் பெருமை தேடித்தந்த இளையராஜாவையும் விழாமேடை புறக்கணிக்கலாமா?

நமது இயக்குனர்களும், கதாசிரியர்களும் தவறாது வந்திருந்து தினமும் சர்வதேசப் படங்களை பொறுமையாக(!) உட்கார்ந்து கண்டு களிப்பதைப் பார்த்த போது அது ஆரோக்கியத்தின் சமிக்ஞையாகவே எனக்குத் தெரிந்தது.

'நம்ம ஊரு பொம்பிளை' ...'எங்கவீட்டு மாப்பிள்ளை'... 'நல்ல காலம் தொலைஞ்சிடுச்சு' ... வகையறாப் படங்களை எடுத்துக் கொண்டிருப்பவர்கள், பிலிம் பெஸ்டிவலில் தரமான படங்களைப் பார்த்தால் தெளிந்து திரும்புவார்கள். இனிமேல் தமிழ்ப்பட ரசிகர்கள் சுமாராகவாவது தரமான படங்களைப் பார்க்கலாம் என்று மனசு நிறைந்தது.

அப்போது... பக்கத்து சீட்டில் இருந்த இருவர் பேசியதில் இருந்து ஒரு பகுதி. 'ஏ.சி ஹோட்டல் ரூம் போட்டு வெளிநாட்டுப்படங்களை வீடீயோவில போட்டுப் பார்த்து அதை தமிழ் படமா 'உல்ட்டா' பண்றது போதாதுன்னு... இங்கேயும் நம்மாளுங்க உட்கார்ந்திட்டாங்க பாரு உருவறதுக்கு...' அதற்கு மற்றவர் சொன்னார்.

'இனிமேல்த்தாண்டா நமக்கு அஷ்டமகாலம் ஆரம்பம். இன்னிக்குப் பார்த்த படத்தை யார் யாரெல்லாம் என்னென்ன பெயரில் எல்லாம் 'நகாசு' பண்ணப் போறாங்களோ...'

**இலக்கியம்**

ஈழத் தமிழரின் சமகாலப் பிரச்சினைகளை மானுடநேயமும் - சத்திய ஆவேசமும் கொண்ட ஒரு படைப்பாளியின் வேகத்துடன், தனக்கே உரித்தான யாதார்த்தம் கெடாத கலா நேர்த்தியுடன் சொல்பவர் செ. யோகநாதன்.

ஈழத்து எழுத்தாளர் செ. யோகநாதன் அவர்கள் கடந்த 7 ஆண்டுகளாக தமிழகத்தின் கலை - இலக்கியத் தளங்களில் நெகிழ்வு நிர்ப்பந்தங்களுக்கு ஆட்படாத ஒரு இலக்கியவாதியாக நின்று சாதித்துக் கொண்டிருப்பதை நினைத்து ஈழத்தின் இலக்கிய நெஞ்சங்கள் பெருமைப் படலாம். மிகக் குறுகிய காலத்தில் தமிழகத்திலுள்ள பிரபல பதிப்பகங்களினால் இவரது 25க்கும்மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதும் மிக முக்கியமான ஒரு சாதனை தான். ஜனரஞ்சக வர்த்தக நோக்கு நூல்களை எழுதும் எழுத்தாளர்களைத் தவிர்த்து விட்டுப் பார்க்கும் போது சமீபத்தில் தமிழகத்திலேயே மிகக் குறுகிய காலத்தில் அதிகமான இலக்கிய நூல்களை எழுதியவர் என்ற பெருமையும் யோகநாதனைச் சேருகிறது.

சில மாதங்களுக்கு முன்பு 'இன்டியா டுடே' பத்திரிகையில் வெளிவந்த ஈழப்பிரச்சினையை மையமாகக் கொண்ட செ. யோகநாதனின் சிறுகதை தமிழக இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் திறனாய்வாளர்கள் மத்தியில் மிகவும் குறிப்பிட்டுப் பேசப்பட்டது.

ஈழத் தமிழ் இலக்கியங்கள் புரிவதே இல்லை, அடிக்குறிப்பு வேண்டும்... அகராதிவேண்டும்... என்று சில பண்டிதப் பூனைகள் ஒரு காலத்தில் நையாண்டி செய்தன. (ஏன் இப்போதும் கூட யாழ்ப்பாணத் தமிழை 'சிங்களத் தமிழ்' என்று கொச்சைப் படுத்தி எழுதும் அகரப் பத்திரிகைகளும் அதன் தமிழ் சூன்யங்களும் பிழைப்பு நடத்திக் கொண்டு தான் இருக்கின்றனர்)

ஆனால் செ. யோகநாதன் அவர்களின் படைப்புக்களில் ஈழத்துப் பேச்சுத் தமிழின் இனிமையும் வனப்பும் வசீகரமும் ஈழமண்ணின் வாசனையாக...தவிப்பாக...அந்த மக்களின் தாகமாக வந்து விழுகின்றபோது அந்தத் தனித்துவத்தை இங்குள்ள விமர்சகர்கள் (நுனிப்புல் மேயாத) சொல்லிப் பாராட்டுவதைக் கேட்கும் போது எனக்குப் பெருமிதமாக இருக்கிறது.

**திசைகள்**

வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்த ஈழத்து இலக்கிய நெஞ்சங்களுக்காக தமிழகத்தில் இருந்து வெளிவரும் சில இலக்கியப் பத்திரிகைகள்-சிற்றேடுகளின் விபரங்களை இங்கே ருகிறேன்.

**அரங்கேற்றம்**
மாதம் இருமுறை

**விருட்சம்**
காலாண்டு இதழ்

**நவீன கவிதை**
ஆசிரியர்: விக்கிரமாதித்யன்

**முகம்**
மாத இதழ்

**கவிதை**
மாத இதழ்

**காலக்ரமம்**
ஆசிரியர்: வி.சி. ரஜேந்திரன்


WROUGHT IRON ARTICLES
WROUGHT IRON GATES & FENCING
WROUGHT IRON SECURITY DOORS & GRILLES
WROUGHT IRON MACHINES MANUFACTURE
ALUMINIUM & STEEL FENCING
ALUMINIUM DOORS & WINDOWS
SECURITY LOCKS
HOME REPAIRS & MAINTENANCE

# RAS INDUSTRIES PTY LTD

QUALITY BY PERFORMANCE

FACTORY 4, 38 AMBERLEY CRESCENT
DANDENONG, VICTORIA 3175, AUSTRALIA

TEL (03) 706-7401 A.H. (03) 793-5857



- இரும்புத் தளபாடங்கள்
- இரும்பு 'கேற்'கள் - வேலிகள்
- இரும்புப் பாதுகாப்புக் கதவுகளும் கிறில்களும்
- இரும்பு மெஷின் தயாரிப்புகள்
- அலுமீனியம் - உருக்கு வேலிகள்
- அலுமீனியம் கதவுகளும் ஜன்னல்களும்
- பாதுகாப்புப் பூட்டுகள்
- வீட்டுத் திருத்த வேலைகள்

## ராஸ் இன்டஸ்ரீஸ் பிரைவேட் லிமிட்டட்


வேலைப்பாடுகளில் திறமை

தொழிற்கூடம் 4, 38 அம்பேர்லி கிறசென்ற்
டான்டெனொங், விக்டோரியா 3175, அவுஸ்ரேலியா

தொலைபேசி (03) 706-7401 (03) 793-5857

# உங்கள் வாகன

திருத்த வேலைகள் எதுவாயினும்
உங்கள் திருப்தியே
எங்கள் சேவையாகும்.



# CAPITAL AUTOS

**311 SPROWSTON MEWS, FOREST GATE, LONDON E7 9AE**
**(REAR OF 311 ROMFORD ROAD)**

**TEL : 519-6187**

Printed and Published by M A. Rahman at AR prints, 375-8, Arcot Road, Madras-600 024 on behalf of PRIYA PUBLICATIONS, AUSTRALIA. Editor : YAL. S. BASKAR